பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 13 சனிக்கிழமை (27.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 180

# 'உதயன்', 'சுடர் ஒளி' ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுங்கள்!

## எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என நாடாளுமன்றில் மாவை எச்சரிக்கை

கொழும்பு,மே27

''ஊடகங்கள் மீதான தொடர் தாக்குதல்களின் உச்சக் கட்டமாக 'சுடர் ஒளி' மற்றும் 'உதயன்' பத்திரிகைகள் மீதான தாக்குதல்கள் அமைந்துள்ளன. அப்பத்திரிகைகளின் நிர்வாகிகள், முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கை விரைந்து எடுக்கப்படவேண்டும்.''

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று நாடாளுமன்றில் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

வடக்கு - கிழக்கில் தமிழர்கள் அரச படையினரால் தினமும் படுகொலை செய்யப்பட்டு வருகின்றமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

''ஊடகங்கள் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளன. தமிழ்ப் பத்திரிகைகள் வடக்கில் எடுத்துச் சென்று விற்பனை செய்யப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களுக்குக் கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. அவர்கள் கொலை செய்யப்படுகின்றனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

### நாடாளுமன்றத்தில் சம்பந்தன் குற்றச்சாட்டு

# சமாதானத்துக்கு எதிரான அரசியல் சக்திகள் அரச படைகளுடன் கைகோத்து அட்டகாசம்

## அவற்றைக் கட்டுப்படுத்தும் திராணி அரசுக்கு இல்லை எனவும் சாடல்

கொழும்பு, மே 27

**அமைதி முயற்சிகளுக்கு எதிரான அரசியற் சக்திகள் இராணுவத்துடன் கைகோத்துக் கொண்டு செயற்படுகின்றன என்று நேற்று நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், இந்த அரசியற் கட்சிகளையோ, இராணுவத்தையோ கட்டுப்படுத்தும் வல்லமையோ, திரணியோ அரசுக்கு இல்லையென்றும் சாடினார்.**

வடக்கு - கிழக்கில் இடம்பெற்றுவரும் வன்முறைகள் குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற - சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தை - ஆரம்பித்துவைத்து உரையாற்றிய சம்பந்தன் எம்.பி., தமிழர்கள் அமைதிப் பேச்சுகளில் நம்பிக்கை இழந்திருக்கின்றனர் என்று சுட்டிக்காட்டினார். இதுவிடயத்தில் அர்த்த புஷ்டியான நடவடிக்கைகளை அரசு இப்போதாவது எடுக்கவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கில் தமிழர்களைப் பற்றி - அவர்கள் படும் இன்னல்கள் பற்றி - இங்கு பேசும்போது நாடாளுமன்றின் சபையில் முக்கியமான அமைச்சர்களில் ஒருவர் கூட இல்லாதிருக்கின்றமை பெரும் வேதனையளிக்கிறது. தமிழர்களின் நலன்களுக்கு இந்த அரசு எவ்வளவு தூரம் முன்னுரிமையளிக்கிறதென்பது இதன்மூலம் புலனாகிறது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## வேலணையில் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்!

யாழ்ப்பாணம், மே 27

ஆலயம் அருகில் வியாபாரம் செய்துகொண்டிருந்த நபர் ஒருவர் சுடப்பட்டுப் படுகாயமடைந்தார். அவரைச் சுட்டவர்கள் இனங்காணப்படவில்லை.

யாழ். தீவகப் பகுதியான வேலணையில இந்தச் சம்பவம் இடம்பெற்றது. நேற்று முற்பகல் 11 மணியளவில் நடந்த சம்பவத்தில் வேலணை 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த எம்.ஜெகதீஸ்வரம் (வயது 29) என்பவரே காயமடைந்தார். (ம)

## மோ. சைக்கிளில் வந்த இருவர் படையினரால் சுட்டுக்கொலை!

### கல்வியங்காட்டில் சம்பவம்

கல்வியங்காட்டில் நேற்று மதியம் 12 மணியளவில் இரு இளைஞர்களைப் படையினர் சுட்டுக்கொன்றனர்.

குறித்த இளைஞர்கள் சிப்பாய் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதை அடுத்து அவர்களைத் தாம் சுட்டுக் கொன்றனர் என்று படையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக யாழ். மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

ஆடியபாதம் வீதியும் நல்லூர் பின் வீதியும் சந்திக்கும் இராமசாமிப் பரியாரியார் சந்தியில் இந்தச் சம்பவம் நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்றது. ரி.வி.எஸ். மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களே சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களைப் படையினர் சோதனையிட முயன்ற சமயம் இந்த சம்பவம் இடம்பெற்றதாக நீதிவான் விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது.

''மோட்டார் சைக்கிளில் வந்த இருவரைப் படையினர் மறித்துச் சோதனையிட முயன்றனர். அவர்களில் ஒரு இளைஞரைச் சிப்பா

(12ஆம் பக்கம் பார்க்க)

## போவரின் போக்கில் தமிழருக்கு அதிருப்தி?

கொழும்பு,மே27

விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேசத் தடை, அமைதி முயற்சிகளின் தற்போதைய நெருக்கடி நிலைமை ஆகியவை தொடர்பான விடயங்களில் அமைதி முயற்சிகளின் அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்ஸன் போவரின் பங்களிப்புக் குறித்த தமிழர்கள் தரப்பில் அதிருப்தி நிலை உருவாகியிருப்பதாக சில வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

எரிக் சொல்ஹெய்மிடமிருந்து இந்தப் பொறுப்பை ஹன்ஸன் போவர் ஏற்றுக்கொண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் கருணா குழுவினர் மூவர் பலி மற்றைய இருவர் புலிகளிடம் சிக்கினர்

கிளிநொச்சி, மே 27

திருகோணமலை மாவட்டம் மூதூரில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவ முயன்ற கருணா குழுவினர் மீது தாங்கள் நடத்திய தாக்குதலில் கருணா குழுவினர் மூவர் உயிரிழந்தனர் என்றும் இருவர் உயிருடன் பிடிபட்டனர் என்றும் விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இசம்சம்பவம் குறித்து புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:-

அரச இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சைக்கிளில் வந்தவர்கள் சூடு: நீர்வேலியில் நேற்று ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம்,மே27

நீர்வேலிப் பகுதியில் நேற்று மாலை 4.45 மணிளவில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த யசோதரன் (வயது 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த நபர் நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்துக்குச் சமீபமாகவுள்ள தனது கடையினுள் இருந்துள்ளார். அவ்வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச்சென்றுவிட்டனர் என்று கூறப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த இவர், உடனடியாக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பின்னர் அங்கு மரணமானார்.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (78)

## சிமெந்து மற்றும் இரும்புக் கம்பி வடக்கே எடுத்துச் செல்லத்தடை

### பாதுகாப்பு அமைச்சு திடீர் உத்தரவு

கொழும்பு, மே 27

கட்டட நிர்மாணப் பொருள்களான சிமெந்து மற்றும் இரும்புக் கம்பிகள் என்பவற்றை தெற்கிலிருந்து வடக்குக்கு எடுத்துச் செல்வது உடனடியாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளது.

இதனால், யாழ்ப்பாணம் கிளிநொச்சி மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நிர்மாணப் பணிகள் அனைத்தும் அப்படியே முடங்கிவிடக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**தவறுதலான வெடிவிபத்தில் உயிரிழந்த களமுனைத் தளபதி வீரமணியின் வீரவணக்க நிகழ்வு புதுக்குடியிருப்பு மற்றும் முல்லைத்தீவின் ஏனைய பகுதிகளிலும் நடைபெற்றது. வீரமணியின் வித்துடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்படுவதையும் தளபதிகள் மற்றும் போராளிகள் அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.**

# புலிகளைத் தடைசெய்வது என்ற தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் மீள்பரிசீலிக்கவேண்டும்

## யாழ். மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே27

தற்போது உருவாகியுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்யக்கூடாது. அதாவது தடை தொடர்பான தீர்மானத்தை மீள்பரிசீலிக்க - மாற்றியமைக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் 51 அமைப்புகள் அங்கம் வகிக்கும் மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் மேற்கண்ட அவசர கோரிக்கையை விடுத்துள்ளது.

இந்த அமைப்புகள் நேற்றுக் கூடி எடுத்த தீர்மானத்தை இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளின் அலுவலகத்துக்கு அனுப்பிவைத்துள்ளன.

இது தொடர்பான தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த பெப்ரவரி மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுக்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படாததும் அடுத்த கட்டப் பேச்சுக்கள் நடைபெறாததும் துரதிர்ஷ்டவசமானவை.

தடைப்பட்டுப்போயுள்ள பேச்சுக்களை மீள ஆரம்பிக்க நோர்வே இரு தரப்புக்களுடனும் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கின்றது.

இரு தரப்புக்கும் இடையிலான பரஸ்பர உறவு சீர்குலைந்ததன் காரணமாக வடக்கு - கிழக்கில் இயல்பு வாழ்க்கை பாழாய்ப் போனது. கைதுகள், கொலைகள், அச்சுறுத்தல்கள் அதிகரித்தன.

மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்கிறார்கள். பலர் இந்தியாவுக்கும் இடம்பெயர்கிறார்கள்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இங்கு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் பணியாற்றுகிறார்கள். விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டால், அவர்கள் இங்கு பணியாற்ற முடியாத சூழல் உருவாகலாம்.

எதிர்காலத்தில் பேச்சுக்களில் இரு தரப்பும் சமஅந்தஸ்துடன் பங்குகொள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை தடையாக இருக்கும் என கருதுகிறோம்.

இன்றைய நெருக்கடியான கால கட்டத்தில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யக் கூடாது. சர்வதேச சமூகமும் இணைத் தலைமை நாடுகளும் இணைந்து நிரந்தரத் தீர்வு ஒன்று தமிழ் மக்களுக்குக் கிட்ட உதவ வேண்டும் என்றுள்ளது.

## இளவாலை கன்னியர் மட ம.வி. மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,மே27

இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தில் தரம் ஒன்று முதல் தரம் 13 வரையிலான வகுப்பு மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் கடந்த 19ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறும் அதிபர் கேட்டுள்ளார்.

## சமய சந்நிதிகளில்

திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

மேற்படி ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ க.மகாகணபதீஸ்வரக் குருக்கள் சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி ஐ.மகேஸ்வரக்குருக்கள் மற்றும் சிவாச்சாரியார்களின் முன்னிலையில் சிவஸ்ரீ ம.சுதாகரக் குருக்கள் தமது மகோற்சவ கைங்கரியத்தை கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் பெருந்திருவிழாவில் இம்முறை எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை ஆலயத்துக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தங்கரதம் வெள்ளோட்டம் விடப்படும்.

* * *

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஏழாம் திகதி நடைபெறும். கும்பாபி ஷேக கிரியைகள் எதிர்வரும் மூன்றாம் திகதி ஆரம்பமாகி எண்ணெய்க் காப்பு ஆறாம் திகதி நடைபெறும்.

நல்லை ஆதீன சிவாச்சாரியார் கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும். (117)

* * *

நீர்வேலி வடக்கு காளியம்மன் ஆலய புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் வியாக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எதிர்வரும் புதன்கிழமை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துவர். (72)

## கந்தபுராண படன பூர்த்தி

திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றுவந்த கந்த புராண படனத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் வள்ளியம்மை திருமண படலம் ஆரம்பமாகி அன்றைய தினமே பூர்த்தி செய்யப்படும்.

ஓய்வுபெற்ற ஆசிரியை செல்வி ச.தங்கப்பொன் தலைமையில் பௌராணிகர்கள் பலர் இதில் கலந்துகொள்வர்.

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,மே27

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தின் வருடாந்த சஞ்சிகையான அச்சாணியின் வெளியீட்டு விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் றோட்டறக் கழக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.




**கல்வியங்காட்டில் நேற்றுப் படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இளைஞர்கள் இருவரினதும் சடலங்களைப் படத்தில் காணலாம்.**

## 'உதயன்', 'சுடர் ஒளி' ஊழியர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்கள் மீதான இவ்வாறான தாக்குதல்கள், அச்சுறுத்தல்களின் உச்சக்கட்டமாகவே அண்மையில் 'சுடர் ஒளி' பத்திரிகை அலுவலகம் மீதும் 'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீதும் மேற்கொள்ளப்பட்ட கொலை வெறித் தாக்குதல்கள் அமைந்துள்ளன.

இம்மாதம் இரண்டாம் திகதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 'உதயன்' பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டது. அப்பத்திரிகையின் சந்தைப்படுத்தும் முகாமையாளர் ஒருவரும் மற்றுமொரு ஊழியரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த இரண்டு பத்திரிகைகளும் தொடர்ந்தும் தாக்கப்படுகின்றன. அதன் நிர்வாகிகளும், ஊழியர்களும் கொலை மிரட்டல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

'உதயன்' தாக்குதல் தொடர்பாக அந்நிறுவனம் சர்வதேச மன்னிப்புச் சபைக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. இத்தாக்குதலில் இரண்டு ஊழியர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாகவும், பொருட்கள் சேதமாக்கப்பட்டமை தொடர்பாகவும், அங்கு மேற்கொள்ளப்பட்ட அடாவெடித்தனங்கள், அட்டூழியங்கள் குறித்தும் அக்கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயுதங்களுடன் புகுந்த ஏழுபேர் கொண்ட - முகமூடி அணிந்த - குழுவினரே 'உதயன்' அலுவலகத்துக்குள் கொடூரத் தாக்குதல் நடத்தினர் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிறுவனம், தொடர்ந்து வரும் அரசுகளின் உயர்பதவி வகித்து வருபவரின் தலைமையின் கீழ் இயங்குகின்ற துணைப்படையைச் சேர்ந்தவர்களே அந்த முகமூடி நபர்கள் என்றும் தெரிவித்திருக்கின்றது.

இத்தாக்குதல் தொடர்பாக அந்நிறுவனத்தினர் பொலீஸில் முறைப்பாடு செய்தபோதும் அம்முறைப்பாட்டுக்கு அமைவாகப் பொலீஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. அந்த விடயத்தையும் அந்நிறுவனத்தினர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

அத்தாக்குதல் தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை மேற்கொள்ளாதமை மாத்திரமின்றி, அப்பத்திரிகை நிறுவனத்தின் பாதுகாப்பையோ அல்லது நிறுவன ஊழியர்களின் பாதுகாப்பையோ உறுதிப்படுத்த இன்னும் போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

'உதயன்' மற்றும் 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் ஊழியர்களுக்கும், முகாமையாளர்களுக்கும் தொடர்ந்தும் கொலை மிரட்டல்கள் விடுக்கப்படுகின்றன. இவர்களின் உயிர்களுக்கு இதுவரை எந்த விதமான உத்தரவாதமும் இல்லை. எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற நிலையே அவர்களுக்கு இப்போதும் உள்ளது.

ஊடகச் சுதந்திரம் பற்றி வாய் கிழியப் பேசுகின்ற இந்த அரசு, இந்த விடயம் குறித்து மௌனமாக இருப்பது ஏன்? 'உதயன்', 'சுடர் ஒளி' மீதான தாக்குதல் தொர்பாக விசாரணை நடத்துவதற்கும் அந்நிறுவனங்கள் மற்றும் அவற்றின் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அரசு தயங்குவது ஏன்?

இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு அப்பத்திரிகை நிறுவனங் களின் பாதுகாப்பையும் அதன் ஊழியர்கள் மற்றும் முகாமையாளர்கள் ஆகியோரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வற்புறுத்திக் கோருகிறோம். - என்றார்.

## சமாதானத்துக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புங்குடுதீவில் தர்ஷினி என்ற இளம் பெண் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை, மட்டக்களப்பில் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. சுட்டுக் கொல்லப்பட்டமை, திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்டமை போன்ற விடயங்களை நாம் ஜனாதிபதியிடம் உடனுக்குடன் ஒவ்வொரு முறையும் எடுத்துக்கூறினோம்.

நீதியான விசாரணைகள் நடத்தப்படுமென அப்போதெல்லாம் கூறப்பட்டது. ஆனால், இந் தச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை எவராவது கைதுசெய்யப்பட்டார்களா? இந்தச் சம்பவங்களில் அரசபடையினர் தொடர்புபட்டிருப்பது பல்வேறு தரப்பிலிருந்தும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜெனீவாப் பேச்சுகளின் பின்னர் அரச படையினரே முதலில் வன்முறைகளில் ஈடுபட்டனர். அரச துணைப்படைகள் தமிழ் சிவிலியன்களைத் தாக்க ஆரம்பித்தன. திருகோணமலையில் விக்னேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டமை அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இல்லையா?

இராணுவத் தளபதி மீதான தாக்குதலின் பின்னர், திருகோணமலையில் விடுதலைப்ப புலிகளின் அடையாளம் காணப்பட்ட இலக்குகள் மீது வான் தாக்குதலை நடத்தியதாக அரசு கூறுகிறது. ஆனால், முதியவர்களும், சிறுவர்களும், முஸ்லிம் மக்களுமே இலங்கை விமானப்படையின் வான் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இவர்கள் புலிகளா?

அல்லைப்பிட்டியில் 4 மாதக் குழந்தை மற்றும் முதிர்ந்த வயதுடையவர்கள் அகோரமாக சுட்டுக்கொல்லப்பட்டனரே. அவர்கள் புலிகளா?

தமிழர்கள் வாழும் பகுதிகள் என்று தெரிந்துகொண்டுதான் அரசு திருகோணமலையில் வான் தாக்குதலை நடத்தியது. ஜே.வி.பி. ஒரு காலகட்டத்தில் ஆயுதப் போராட்டம் நடத்தியபோது கிராமங்களில்தான் அதன் உறுப்பினர்கள் ஒளித்திருந்தனர். அப்போது கிராமங்கள் மீது இப்படி வானிலிருந்து குண்டு போட்டீர்களா? இப்போது தமிழர்கள் பிரதேசம் என்பதால் கண்மூடித்தனமான வான் வழிக் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்துகின்றீர்கள்.

**உதயன் மீதான தாக்குதல்**

உதயன் பத்திரிகை அலுவலகம் மீதான தாக்குதலில் அங்கு இரண்டுபேர் கொல்லப்பட்டனர். அதையடுத்து அப்பாவி மாணவர்கள் சிலரைக் கைதுசெய்த அரசு, இந்தத் தாக்குதல் பழியை அவர்கள் மீது போடுவதற்கு முயன்றது. இது பெரும் தவறு. இவ்வாறான திரிப்புகள் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் முயற்சிகளாகும். ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்பதை சர்வதேச சமூகம் அறியவேண்டும்.

தமிழர்கள் மீது தொடர்ந்து வன்முறைகள் இடம்பெற்றுவருவதால் அவர்கள் இடம்பெயர்கின்றனர். அகதிகளாகச் செல்வோரைக் கைதுசெய்யும் பொலீஸார் 'இது ஒரு ஆட்கடத்தல் விடயம்' என்கின்றனர். இது என்ன கேலிக் கூத்து?

தமிழ் மக்கள் மீது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவதன்மூலம் தமிழர்களை ஒழித்துவிடலாமென நினைக்காதீர்கள். அமிழ்த்த அமிழ்த்தத் தமிழர்கள் மேலெழும்பக் கூடியவர்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழர்களுக்குக் குறைந்தபட்ச உரிமைகளைக் கூடத் தருவதற்கு சிங்கள அரசுகள் தயாரில்லை. வெறும் வெற்றுப் பேச்சுகள் வேண்டாம். யாதார்த்த ரீதியில் எதனையும் செய்யுமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

75 வீதமான தமிழர்கள் வாழும் திருகோணமலை மாவட்டத்திற்கு ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியொருவர் அரச அதிபராக நியமிக்கப்படவுள்ளார். ஏன் இந்த இராணுவ மயம்? உங்களிடம் தேர்ச்சிபெற்ற அரச அதிகாரிகள் இல்லையா? தகுதிவாய்ந்த அரச அதிகாரி ஒருவர் தேவையானால் கூறுங்கள். நாங்கள் தகுதிவாய்ந்த தமிழ் அதிகாரிகளைத் தருகிறோம்.

எல்லாவற்றையும் இராணுவமயமாக்க முயலும் உங்களின் உள்நோக்கம் என்ன என்பது எமக்குப் புரிகிறது.

தமிழர் தாயகத்தின் பாரம்பரிய பெருமைமிக்க திருகோணமலையில் தமிழர்களின் உணர்வுகளுடன் விளையாடாதீர்கள். தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை நிறுத்துங்கள். அமைதிப் பேச்சுகளை அர்த்த புஷ்டியாக்குங்கள். நேர்மையாகவும் நிதானமாகவும் அரசு செயற்படவேண்டும்.

- இவ்வாறு கூறினார் சம்பந்தன் எம்.பி.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# ஈழத் தமிழரின் ஏகோபித்த கருத்து

வாழ்வியல் உரிமைகளுக்காகவும், அடிப்படைச் சுதந்திரங்களுக்காகவும் - ஏன் தம் இனத்தின் தனித்துவமான இருப்பை உறுதிப் படுத்தவும் வேண்டி - ஈழத் தமிழர்கள் நடத்திவரும் போராட்டத்தின் சரிதம் நீண்டது; நெருக்கடிகள் நிறைந்தது; கொந்தளிப்பான இந்த வரலாற்றுப் பாதையில் தொடர்ச்சியாகக் கொடூரங்களையும், அடக்குமுறைகளையும், கொடும் போரையும் எதிர்கொண்டவர்கள் தமிழர்கள். அந்த வரலாற்று ஓட்டத்திலே மற்றொரு மைல் கல்லிலே நாம் இன்று நிற்கின்றோம்.

சுயநிர்ணயத்துக்கான தமிழரின் இந்த அரசியல், இராணுவப் போராட்ட வரலாறு சுமார் ஆறு தசாப்த காலத்துக்கு நீண்டு செல்கின்றது.

இந்தப் படிநிலை வரலாற்றில், வெவ்வேறு காலகட்டங்களில், வெவ்வேறு வழிமுறைகளில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பல்வேறு முயற்சிகளில் தமிழர்களின் தலைமை முழு ஈடுபாட்டுடனும், இதயசுத்தியுடனும் பங்கு பற்றி வந்திருப்பதை உலகம் அறியும்.

ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் தமிழர்களின் அரசியல் போராட்டம் அமைதி வழியில் - அஹிம்சை முறையில் - சாத்வீக நெறியில் - மென்முறை வடிவில் - ஜனநாயக நாடாளுமன்றப் பாதையில் - சுருக்கமாகக் கூறுவதானால் காந்தீய கொள்கைப் போக்கில் - முன்னெடுக்கப்பட்டது.

சத்தியாக்கிரகம், குந்துமறியல், சட்ட மறுப்பு, 'ஸ்ரீ' எதிர்ப்பு எனப் பல்வேறு வடிவங்களில் தமிழர்கள் நடத்திய இந்த அமைதி வழிப் போராட்டங்கள் ஆயுத முனையில் - பலாத்காரமாக - அடக்கப்பட்டன. தமது சரித்திரபூர்வத் தாயகத்தில் தம்மைத்தாமே ஆளும் சுயாட்சி வேண்டி - அரசியல் உரிமை கோரி - தமிழ் மக்கள் தொடுத்த அஹிம்சை வழிப் போராட்டங்களை சிங்கள, பௌத்த பேரினவாத அரசுகள் ஆயுத வன்முறை வாயிலாக மிருகத்தனமாக அடக்கி ஒடுக்கின.

தமிழரின் எழுச்சிப் போராட்டங்கள் இராணுவ ரீதியில் அடக்கப்பட்டபோது தமிழர்களுக்கு எதிரான பேரினவாத அடக்குமுறை தீவிரம் பெற்றது. அது, தமிழர்களின் சமூக, பொருளாதார, கலாசார வாழ்வில் ஆழமான பாதிப்புக்களை ஏற்படுத்தி, அவர்களின் மொழியுரிமை, உயர் கல்வியுரிமை, தொழில் உரிமை, வேலைவாய்ப்புரிமை, தமது தாயகத்தில் இனத்தின் தனித்துவ வாழ்வுரிமை போன்றவற்றைப் பறித்தது.

அப்போதுதான் - எழுபதுகளின் நடுப்பகுதியில்தான் - புரட்சிகர இளம் தமிழ்ச் சமுதாயம் வேறு வழியின்றி தமது விடுதலைக்கான போராட்டத்தை ஸ்திரப்படுத்தி முன்னெடுப்பதற்காக ஆயுத வழி நோக்கித் திரும்பியது எனலாம். தமிழ் இளைஞர்களின் இந்த வன்முறை எழுச்சி, ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் ஆயுதப் போராட்ட வடிவமாகத் தோற்றம் பெற்ற போதுதான், பேரினவாத அடக்குமுறையால் எழுந்த கொடூரங்களின் விளைவுகள் தமிழர் தாயகத்துக்கு வெளியிலும் அதன் கொடூரக் கரங்களை விரிக்கத் தொடங்கியிருப்பதையும் அது சிங்கள தேசத்திலும் சகிக்க முடியாமல் தகிக்கத் தொடங்கியிருப்பதையும், மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதையும் சிங்களத் தலைமைகள் உணர வேண்டிய சூழல் ஏற்பட்டது.

அத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்தப் பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வுக்கு இறங்கி வந்த சிங்களத் தலைமைகள், அந்த சமாதான முயற்சிகளில் நேர்மை சுத்தியுடன் ஈடுபடவில்லை. சிங்கள - பௌத்த - இனவாதப் பொறியில் ஊறிக் கிடக்கும் தென்னிலங்கைத் தலைமைகள் சமாதான முயற்சிகளில் விட்டுக் கொடாத கடும் போக்கைக் கடைப்பிடித்து வருவதால் இந்த முயற்சிகள் எல்லாம் சிக்கலடைந்து முன்னேற்றம் காணாது, முடங் கிப் போயின.

நீதி, நியாயமான அபிலாஷைகளின் அடிப்படையில் உரிமை கோரிய தமிழர்கள், தொடர்ந்து பேரினவாதத்தால் ஏமாற்றப்பட்டதே அமைதி முயற்சிகளின் நிலையான வரலாறாகும்.

இவ்வளவு தோல்விகரமான, ஏமாற்றங்கள் மிகுந்த அனுபவங்களுக்குப் பின்னரும் கூட - தமக்கெனத் தமது தாயகத்தில் தனி அரசுக்கான அடிப்படைக் கட்டுமானங்களை நிறுவி, ஒரு நிழல் அரசையும் தனி நிர்வாகத்தையும் உருவாக்கி, தமக்கென ஒரு தேசிய இராணுவத்தைப் பலமுள்ளதாக ஸ்தாபித்த பின்னரும் கூட - கடந்த நான்கரை ஆண்டுகளாக யுத்தத்தை நிறுத்தி, அமைதி வழித் தீர்வுக்கு வாய்ப்பளித்து, அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, இணக்க நிலைக்கு இடம் தந்து, தமிழர் தரப்பு பொறுமை பேணுகின்றது என்றால் அதற்கு ஒரேயொரு காரணம்தான் உண்டு. சர்வதேச சமூகத்தின் பங்களிப்பில் இடம்பெறும் இந்த முயற்சிகளிலாவது தமக்கு நீதி, நியாயம் கிடைக்கும் என்று அவர்கள் நம்பிக்கை யுடன் எதிர்பார்ப்பதுதான் அந்தக் காரணம்.

ஆனால், அந்த நம்பிக்கையும் தளர்ந்து - தகர்ந்து - போகும் சூழ்நிலை இப்போது உருவாகி வருகிறது. தமிழர்களின் ஏக, அதிகார பூர்வப் பிரதிநிதிகளாகவும், தமிழரைப் பாதுகாக்கும் தேசிய இராணுவ மாகவும் இருக்கும் விடுதலைப் புலிகள் மீது இருபத்தியைந்து ஐரோப்பிய நாடுகளின் ஒன்றிணைப்பு அமைப்பான ஐரோப்பிய ஒன்றியம் தடை விதிக்க முயல்வது - அதுவும் இவ்வளவு காலமும் இருந்து விட்டு இலங்கையில் யுத்தம் நிறுத்தப்பட்டு, அமைதி நிலவும் இவ்வேளையில் இந்த நடவடிக்கையை எடுக்க முனைவது - இலங்கை விவகாரத்தில் சர்வதேசப் பங்களிப்பினின்றும் தாங்கள் ஒதுக்கப்படுவதும், தனிமைப்படுத்தப்படுவதும் ஆன ஓர் உணர்வையே தமிழர்களுக்குத் தருகின்றது.

அமைதிமுயற்சிகளில் காலங்காலமாக இடம்பெற்றுவந்த ஏமாற்றுதல்களின் ஒரு தொடர் வடிவமாகவே இந்த நடவடிக்கையையும் பார்க்க வேண்டிய நிலைமை தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

பௌத்த, சிங்களப் பேரினவாதம் ஏமாற்றிய காலம் போய், அதன் வலையில் சிக்கி - அதன் கயிற்றை விழுங்கி - சர்வதேச சமூகமும் தமிழரை, அவர்களின் நீதியான போராட்டத்தின் பின்னால் உள்ள நியாயங்களைப் புறமொதுக்கி - ஏமாற்ற முயல்வதாகவே தமிழர்கள் நினைக்கின்றார்கள்.

இது விடயத்தில், சர்வதேசத்தின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்ப கனடாவிலும், ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் எதிர்வரும் திங்களன்று ஒரே நாளில், ஒரே நேரத்தில் புலம் பெயர்ந்த தமிழர்கள் நடத்தவிருக்கும் மாபெரும் எழுச்சி நிகழ்வு, ஈழத் தமிழர்களின் ஏகோபித்த கருத்தைப் பிரதிபலிப்பதாகவும் கூட அமைகின்றது. சர்வதேச சமூகத்துக்கு இது சமர்ப்பணம்.

# இந்திய எல்லைப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரி ஈழத்தமிழ் அகதிகளைப் பார்வையிட்டார்

மதுரை,மே27

இந்திய மத்திய அரசின் உத்தரவின் பேரில் நேற்றுமுன்தினம் இராமேஸ்வரத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்ட இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் பொலீஸ் அதிபர் அலெக்ஸாண்டனர் டானியல், மண்டபம் அகதி முகாமுக்குச் சென்று இலங்கைத் தமிழ் அகதிகளின் பிரச்சினைகளையும் குறை நிறைகளையும் கேட்டறிந்தார்.

இலங்கையிலிருந்து வரும் அகதிகளின் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வரும் அதேசமயம் அதற்கமைய அகதி முகாம்களின் எண்ணிக்கையை விரிவுபடுத்த அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

அதேவேளை, அகதிகள் என்ற போர்வையில் தமிழ்நாட்டுக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவக்கூடாது என்பதிலும் அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் அகதிகளிடம் நேரடி விசாரணைகளை நடத்துவதற்காக புதுடில்லியில் இருந்து மதுரை வந்த இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் பொலீஸ் அதிபர் அலெக்ஸாண்டர் டானியல், நேற்றுமுன்தினம் மண்டபம் அகதி முகாமிற்குச் சென்று அகதிகளுடன் நேரடியாகவே கலந்துரையாடினார். இந்தப் பயணத்தின் பின்னர் அவர் தமிழகத்திற்கு இலங்கை அகதிகள் வருவது குறித்து மத்திய பாதுகாப்பமைச்சிற்கு அறிக்கையொன்றையும் சமர்ப்பிக்கவுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# சங்கானை பிரதம தபாலகத்துக்கு காணி கொள்வனவுக்கு ஏற்பாடு

வலி.மேற்கு,மே27

சங்கானையில் நவீன வசதிகள் அடங்கிய தபால் நிலையமொன்றை அமைப்பதற்குக் காணி ஒன்று கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை அப்பகுதி கிராம அலுவலர்கள் மேற்கொண்டுள்ளனர். சங்கானையிலுள்ள பொது அமைப்புகள் மூலம் நிதி சேகரித்து பிரதான வீதியில் காணி கொள்வனவு செய்யப்படவுள்ளது.

கடந்த பல வருடங்களாகத் தனியார் கட்டடத்தில் சங்கானை தபால் நிலையம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (175)

# சிவாலயங்களின் வரலாறு நூல் வடிவில் வெளிவருகிறது

யாழ்ப்பாணம்,மே27

வித்துவான் அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதனால் தொகுக்கப்பட்ட ஈழத்துச் சிவாலயங்களின் வரலாறு தொடர்பான நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் இரண்டாம் திகதி மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருப்பணித்தவமணி சி.தியாகராசா (எஸ்.ரி.ஆர்.) தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தைச் சேர்ந்த திருமதி சாந்தி திருநாவுக்கரசன் கலந்துகொள்ளவுள்ளார்.

திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபைத் தலைவர் மூதறிஞர் இ.நமசிவாயம் முன்னிலையில் இந்நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் ஈழத்தில் உள்ள 80இற்கும் மேற்பட்ட சிவாலயங்களின் வரலாறுகளை உள்ளடக்கியதாக 350 பக்கங்களைக் கொண்டு இந்நூல் வெளிவருகின்றது.

# மாகாண அரச ஊழியர்களுக்கு சிங்கள மொழிப் பயிற்சிநெறி

தென்மராட்சி,மே27

யாழ். மாவட்ட அரச திணைக்களங்களில் கடமையாற்றும் மாகாண அரச ஊழியர்களுக்கு அடிப்படை சிங்கள மொழிப்பயிற்சிநெறி வழங்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்றவுள்ள அரச ஊழியர்களின் விவரங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்ட பிராந்திய ஆணையாளர் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களத்தினால் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

வகுப்புகள் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்படும். யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, நெல்லியடி மகா வித்தியாலயம் ஆகிய இரு நிலையங்களில் வகுப்புகள் நடத்தப்படும்.

கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற அடிப்படை சிங்கள வகுப்புகளில் கலந்துகொண்டவர்கள் இம்முறை கலந்துகொள்ளமுடியாது.

பயிற்சியில் கற்க விரும்பும் பத்து அலுவலர்களின் பெயர், பதவி, தனிப்பட்ட முகவரி, கற்க விரும்பும் நிலையம், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விவரங்களுடன் தொலைநகல் மூலம் அனுப்பிவைக்குமாறும் கேட்டுள்ளார். (117-75)

# அமெரிக்கத் தூதுவராக புதியவர் நியமனம்

இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான புதிய அமெரிக்கத் தூதராக றொபேட் ஓ.பிளேக் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் முன்னர் இந்தியாவுக்கான பிரதித் தூதராகவும் எகிப்து, நைஜீரியா ஆகிய நாடுகளுக்கான பொருளியல் அதிகாரியாகவும், துனிசியா நாட்டின் அரசியல் ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார். (க)

# கிளிநொச்சி வைத்தியசாலை மேம்பாட்டுப் பேரவைக் கூட்டம்

வட்டக்கச்சி,மே27

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் மேம்பாட்டுப் பேரவையின் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.சதானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் பேரவையின் தற்போதைய உறுப்பினர்களையும் முன்னாள் உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு பேரவைச் செயலாளர் க.தர்மரட்ணம் கேட்டுள்ளார். (405)

# முகமாலையிலிருந்து இடம்பெயர்ந்த ஆறு குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள்

## 'யுனிசெவ்' அமைப்பின் நிதி உதவியுடன்

தென்மராட்சி,மே27

முகமாலைப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து வரணி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் சுமார் 6 குடும்பங்களுக்குத் தற்காலிக வீடு வசதியை ஏற்படுத்திக் கொடுக்க 'யுனிசெவ்' நிறுவனம் முன்வந்துள்ளது.

சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இரு அறைகளைக் கொண்ட வீடுகள் இவர்களுக்கு கட்டிக் கொடுக்கப்படவுள்ளது. இதற்காக கல், மண், சிமெந்து ஆகிய பொருள்களை அண்மையில் அந்நிறுவனம் வழங்கியுள்ளது.

முகமாலைப் பிரதேசத்தில் கடந்த கால யுத்த நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து வரணி வடக்குப் பிரதேசத்தில் தற்காலிகமாகக் குடியிருக்கும் இம்மக்களின் அவல நிலையை அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் இதுபற்றி யாழ். அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இக்குடும்பங்கள் பல வருடங்களாக ஓலைக்கொட்டிலில் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (122)

# தென்மராட்சிக் கல்வி வலயத்தில் 51 ஆசிரியர்களுக்குப் பதவியுயர்வு

தென்மராட்சி,மே27

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த 51 ஆசிரியர்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2:IIஇற்குப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது..

பதவியுயர்வுக்கான நியமனக் கடிதங்கள் மாகாண கல்வி அமைச்சினால் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தமது நியமனக் கடிதங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (117)

# வலி.கிழக்கில் வெங்காயச் செய்கை இம்முறை சூடு பிடிக்கவில்லை

அரியாலை,மே27

குடாநாட்டில் தற்போது நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையால் விவசாயிகள் இம்முறை வெங்காயச் செய்கையை மேற்கொள்வதற்கு அதிக நாட்டம் செலுத்தவில்லை.

நீர்வேலி, கோப்பாய், ஊரெழு, புத்தூர், ஆவரங்கால் மற்றும் அச்சுவேலி, மாசிவன், நவக்கிரி போன்ற இடங்களில் விவசாயிகள் குறைந்தளவு வெங்காயப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டுள்ளனர்.

தற்போது நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையாலும் மற்றும் மண்ணெண்ணெய்க்கு நிலவி வரும் தட்டுப்பாடு காரணமாகவும் விவசாயிகள் வெங்காயச் செய்கையை மேற்கொள்வதற்கு பின்னடித்து வருவதாகவும் அதிக அக்கறை காட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (17)

## நாளை

வைகாசி 14

ஞாயிற்றுக்கிழமை

28.05.2006

திதி : பிரதமை

முற்பகல் : 10.36

நட்சத்திரம் : ரோகிணி

முற்பகல் : 08.00

சுபநேரம் : 08.52 - 10.22

இராகுகாலம் : 04.22 - 05.52

## உதயவாக்கு

வாழ்க்கையின் முற்பகுதியில் வெற்றிபெற சுறுசுறுப்பும் ஊக்கமும் நம்பிக்கையும் தேவை. பிற்பகுதியில் வெற்றிபெறுவதற்கு பொறுமையும் தன்னடக்கமும் அவசியம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

மீசாலை இரவீந்திரன் - தர்ஷினி தம்பதிகளின்
செல்வப் புதல்வி இராகவி தனது முதலாவது பிறந்தநாளை
இன்று (27.05.2006) சனிக்கிழமை லண்டனிலுள்ள தனது இல்லத்தில்
வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.



செல்வி இராகவி

இவரை அன்பு அப்பா, அம்மா, மீசாலையிலுள்ள அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, லண்டன் சித்தப்பா, கனடா பூட்டி, பாட்டன்கள், பாட்டிமார், பெரியம்மா, மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், தம்பி, பிரான்ஸ் மாமா, மாமி, மச்சான், மச்சாள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
ச.யோகராசா (மீசாலை).

(50454) (24.15.45.26)

# வாழ்த்துகின்றோம்



கலாபூஷணம்
விருது பெற்ற
நாதஸ்வர வித்துவான்
V.K.கானமூர்த்தியை
நீண்ட ஆயுள் பெற்று
வாழ வாழ்த்துகிறோம்.

கோண்டாவில் கிழக்கு. K.காந்தன் குடும்பம்.

(50547) (24.15.45.26)

## விஞ்ஞானபாட மதிப்பீட்டுப் பரீட்சை

தென்மராட்சி,மே27

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்பு மாணவர்களுக்கு கடந்த 16 ஆம் திகதி நடைபெறவிருந்த விஞ்ஞான பாட செயற்றிட்ட மதிப்பீட்டுப் பரீட்சை எதிர்வரும் நான்காம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் மதிப் பீட்டுப் பரீட்சைக்கான வினாத்தாள்களை எதிர்வரும் இரண்டாம் திகதி காலை 9 மணிக்கு வலய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும்-

பரீட்சை மதிப்பீட்டு ஆய்வை எதிர்வரும் பத்தாம் திகதி வலயக் கல்வி அலுவலகத்தில் கையளிக்குமாறும் - வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளாளர்.

(117)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆத்திசூடி வீதி,
கந்தர்மடத்தைச் சேர்ந்த
**திரு.ச.துரைவீரசிங்கம்**
அவர்கள் கொழும்பு
ஜோன்.டி.சில்வா ஞாபகார்த்த
கலையரங்கில் 22.05.2006 இல்
கலாசார அமைச்சினால்
"கலாபூஷணம்" விருது
வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
அவரது கலைச்சேவை தொடர
வாழ்த்துகிறோம்

ரஞ்சனதாஸ் குடும்பம்,யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.

(50536)(26.15.45)

சாவகச்சேரி - பெருங்குளம் - கல்வயல்
அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலனசபை

# 45 ஆம் நாள் நினைவில் ஆத்ம சாந்தி



**அமரர் பஞ்சாட்சரம் கிருபாகரன்**

அவர்கள் எமது ஆலயத்தின்
உப செயற்பாட்டாளராக பலகாலம்
தொண்டுகள் பல புரிந்து
பெருங்குளம் பிள்ளையார்
பாதத்தில் சரணடைந்த "கிருபா"
என்ற நாமத்தை சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(சி/49512)(26.15.45) ஆலய பரிபாலனசபை.


# COMPUTER EXPRESS
## Institute of Information Technology

இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422

**யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்.**

# Diploma in Hardware Engineering

உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற.

**Course Contents :-**

- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்.
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம். (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்.
- Software, Operating system இன்ஸ்ரோல் செய்தல்.
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

Course Fee :- 2000/=
Free Study Pack & Driver CD
வகுப்புக்கள் ஆரம்பம் :-
29/05/2006 :- 08.30

**Hardware பயிற்சி.**

- கணனிப் பாகங்களை இனம்காணும் முறை.
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk இனை முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Network தொடர்பான அறிமுகம்
- Trouble Shooting & Maintenance.

**Software பயிற்சி.**

- Operating System நிறுவும் முறை (Windows 98 & Windows XP)
- Software Install செய்யும் முறை.
- Driver Installation செய்யும் முறை. (Sound Card, Modem, VGA, TV Card, Printer)
- Trouble Shooting (File updating, Copying)

# Diploma in Computerized Accounting

## ACCPAC + Quickbooks premier + MYOB

ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

One week

**Course Contents:-**

Introduction to Computer
Manual Accounting
Financial Accounting
Cost Accounting
Taxation (including VAT)
Stock Control
Bank Reconciliation
Budgeting
Fore casting
Business Planing
Internet & e-mail

வகுப்புக்கள் ஆரம்பம்:-
29/05/2006

**யாருக்கு:-**

கணக்கியல் துறையில் (அரச,தனியார்,NGO) வேலைசெய்துகொண்டிருப்போருக்கும், வெளிநாட்டில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கும், பல்கலைக்கழக, உயர்தொழினுட்ப கல்லூரி மாணவர்களிற்கும், கணக்கியல் துறையில் கற்றுக்கொண்டிருப்போர் அனைவரிற்கும்.

Course Fee:-
~~17500~~ 3500

**கற்கைநெறியின் நன்மைகள் :-**

- பாடநெறியின் இறுதியில் 100% பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்
- கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடன் ...

# Computer Hardware
## Free Workshop

**ஒரு வார கால முழுநேர இலவச கற்கைநெறி**

உங்களுக்காக 100% செய்முறைப் பயிற்சியினுடனான
ஒரு வார குறுகிய கால Hardware கற்கைநெறி ஆரம்பமாகின்றது.

**ஆரம்பம்: 27.05.2006 காலை 11.00 மணி**

- *Assembling*
- *Upgrading*
- *Troubleshooting*
- *Repairing*
- *Software Installation*

அனுமதிக் கட்டணம் மட்டும்!

ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக இக் கற்கைநெறி அமைகின்றது.

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஆய்வு கூடத்தில் அதிநவீன கணினிகளில் செய்முறைகள் வழங்கப்படும்.

இதில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு எமது நிறுவனத்திலேயே தொழில்சார் வசதிகள் வழங்கப்படும்.

**CICS Computer Technologies**

# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
E-mail: cicsjaffna@gmail.com

பதிவுகளுக்கு முந்துங்கள்!


# 45 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு
31 - 08 - 1932



உதிர்வு
13 - 04 - 2006

## திருமதி பீ.கமலாம்பாள்

13-04-2006 அன்று சிவபதமடைந்த திருமதி பீ.கமலாம்பாள் அவர்களின் 45 நாள்கள் சென்றாலும் துயரம் நீங்கவில்லை. அண்ணா, தம்பிமார் ஆசையுடன் துணை நின்று சுகம் பார்த்து சென்றார்கள். நிமிடங்கள் 15 செல்லமுன் உங்கள் நினைவு அலைகள் மறந்து காலன் அழைத்துச் சென்றானே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இன்று (27.05.2006) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

*105/1, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (50396)(26.15.45)

சகோதர, சகோதரிகள்,
சு.புவிராஜசிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரின் அடாவடித்தனம் அடங்காவிடில் மீண்டும் யுத்தம் வெடிக்கும்; தமிழீழம் பிறக்கும்

## சபையில் கஜேந்திரன் எம்.பி. கர்ஜனை

''வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் மீது அரச படையினர் மேற்கொண்டுவரும் அடாவடித்தனமான கொலை வெறியாட்டத்தை உடனடியாக நிறுத்தாவிட்டால் நிச்சயம் யுத்தம் வெடிக்கும். அவ்வாறு யுத்தம் வெடித்தால் தமிழீழம் தானாகவே உருவாகும்''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

வெற்றிலைக்கேணி 'டோரா' படகுகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான விவாதம் நாடாளுமன்றில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே கஜேந்திரன் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

இம்மாதம் 12ஆம் திகதி யாழ். வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் கடற்படையினரின் 'டோரா' படகுகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக இந்த விவாதம் இப்போது இந்தச் சபையில் நடத்தப்படுகிறது.

உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகள் படையினரின் படகுகளைத் தேடிச்சென்று தாக்குதல் நடத்தவில்லை. புலிகள் கடற்பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் அப்பயிற்சி நடவடிக்கைக்கு இடையூறு விளைவிப்பதற்காகக் கடற்படையினர் புலிகளின் படகுகள் மீது தாக்குதல் தொடுத்தனர். புலிகள் பதில் தாக்குதல் தொடுத்தனர் இதுதான் உண்மையில் நடந்தது.

ஆனால், படையினரோ காரணங்கள் ஏதுமின்றி தமிழர்களைக் கொலைசெய்து வருகின்றனர். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதிலிருந்து வடக்கு - கிழக்கில் மரண வீடுகள் அதிகரித்து வருகின்றன. தினமும் மரண ஓலங்களே கேட்கின்றன.

படையினர் தமிழ் மக்களின் பாதையில் முள்வேலியாக நிற்கின்றார்கள். அதில் சிக்கிய சேலையாக தமிழர்களின் நிலை மாறியுள்ளது. இந்த நிலைமையை இல்லாதொழிக்கும் நோக்கில்தான் புலிகள் செயற்படுகின்றனர். தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வுக்காகவே புலிகள் பாடுபடுகின்றனர்.

தமிழ் மக்கள் வடக்கு - கிழக்கில் துன்பம் அனுபவிக்கின்ற வேளை, தெற்கில் சிங்களவர்கள் இன்பம் அனுபவிக்கவேண்டும் என அரசு எதிர்பார்க்கின்றது.

அரசு மேற்கொண்டுவரும் அரச பயங்கரவாதத்துக்குத் தூபம் போடுபவர்களாகவே ஜாதிக ஹெல உறுமயத் தேரர்கள் இந்தச் சபையில் காணப்படுகின்றனர்.

தமிழர்கள் இவ்வாறு துன்பத்தை அனுபவித்து வரும் நிலையில்தான் ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்வது தொடர்பாக ஆராய்ந்து வருகிறது. அதற்கு முன்பு அரசு மேற்கொண்டுவரும் பயங்கரவாத நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

அரசின் பயங்கரவாதத்தைக் கண்டிக்காது புலிகளைக் கண்டிக்கும் நடவடிக்கையில் ஐரோப்பிய ஒன்றியம் ஈடுபட்டிருப்பது வேதனை தருகிறது.

எமது உரிமைகளை நாமே பெறவேண்டியுள்ளது. எமது போராட்டத்தை யாரும் தடுக்க முடியாது. ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு கூறும் தகுதி யாருக்கும் இல்லை. நாம் அப்படி வைக்கவும் மாட்டோம்.

நாம் எமது உயிர் இருக்கும்வரை போராடுவோம். ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்துபெற்ற எமது மண்ணை நாம் இழக்க மாட்டோம். தமிழீழத்தை உருவாக்கியே தீருவோம் - என்றார்.

# மீண்டும் சமாதானப் பேச்சு வேண்டுமென்றால் அரசு சாதகமான சூழலை உருவாக்க வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. தெரிவிப்பு

" இலங்கை அரசு தமிழர்கள் தொடர்பான எந்த விடயத்திலும் நீதியான முறையில் செயற்படுவதில்லை. இதன் காரணமாகவே அரசு மீது நம்பிக்கை இழந்துள்ள புலிகள் அரசுடன் பேசிப் பயனில்லை என்று நினைக்கின்றனர். அரசுடன் புலிகள் அமைதிப் பேச்சில் ஈடுபடுவது சாத்தியமற்ற ஒன்றாகிவிட்டது. உண்மையில் அமைதிப்பேச்சு இடம்பெற வேண்டும் என்றால் அரசு, புலிகளுக்கு நம்பிக்கை வரும் விதத்தில் செயற்படவேண்டும்''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நாடாளுமன்றில் கூறினார்.

இம்மாதம் 12 ஆம் திகதி யாழ். வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் கடற்படையினரின் 'டோரா' படகுகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான விவாதம் சபையில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாம் எப்போதும் யுத்தத்தை விரும்பியதில்லை. அஹிம்சைவழி மூலமே பிரச்சினைக்குத் தீர்வு பெறப்படவேண்டும் எனக் கூறி அரசு மீது நம்பிக்கைகொண்டே செயற்பட்டோம்.

ஆனால், சிங்கள அரசுகள் அந்த நம்பிக்கைகளைச் சிதைத்துவிட்டன. இதனால், வேறுவழிகள் இன்றி நாம் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டி ஏற்பட்டது. இப்போதும் கூட நீங்கள் திருந்தவில்லை. ஏன் ஆயுதம் ஏந்தினோம் எனச் சிந்தித்துப் பார்க்கவில்லை. மீண்டும் மீண்டும் எமது பிரச்சினைகளை அதிகரிக்கவே செய்கின்றீர்கள். இதன் காரணமாகவே தீர்க்கமுடியாத அளவுக்குப் பிரச்சினைகள் வளர்ந்துவிட்டன.

எந்த விடயத்திலும் சிங்கள அரசுகள் நேர்மையாகச் செயற்படவில்லை. பிரச்சினையைத் தீர்க்கப்போவதாகக் கூறிக்கொண்டு பிரச்சினையை மேலும் வளர்த்துவிட்டன.

ஜெனீவாப் பேச்சின் முடிவில் எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படியென்றால் எதற்கு விழுந்தடித்துக்கொண்டு பேச்சை நடத்தினீர்கள்?

இந்தப் பேச்சில் எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தாமல் மீண்டும் புலிகளைப் பேச்சுக்கு அழைக்கின்றீர்கள். உங்களை நம்பி எப்படிப் பேச்சுக்கு வருவது? அப்படிப் பேசினால் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை.

அடுத்த கட்ட ஜெனீவாப்பேச்சு நடக்க வேண்டும் என்றால் தமிழர்கள் மீதான படுகொலைகளை நிறுத்தி பேச்சிற்கான ஒரு சாதக சூழலை அரசு உடனடியாக உருவாக்க வேண்டும். இல்லையேல் பேச்சு நடக்காது. - என்றார்.

# புலிப் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதன் மூலம் வடக்கு - கிழக்கு தமிழர்களை காப்பாற்ற முடியும்

## சபையில் விமல் வீரவன்ஸ உபதேசம்

''எமது நாட்டைப் பாதுகாக்க - சமாதானத்தை நிலைநாட்ட - வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்களைக் காப்பாற்றப் புலிகளுக்கு அடிமைப்பட்டு அவர்களுக்குச் சார்பாகச் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உண்மையான உணர்வுகளை வெளிக்காட்ட வேண்டுமென்றால், புலிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் பயங்கரவாதம் முறியடிக்கப்படவேண்டும். இந்தப் பயங்கரவாதத்தை முறியடிக்கச் சரியான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று வகுக்கப்படவேண்டும். அதன் அடிப்படையில் எல்லோரும் ஒன்றிணைந்து புலிகளின் பயங்கரவாதத்தை அடக்க முன்வரவேண்டும்.

- இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில், இம்மாதம் 12ஆம் திகதி வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் கடற்படையினரின் 'டோரா' படகுகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்குக் கண்டனப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

இம்மாதம் 12ஆம் திகதி யாழ். வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் 710 படைவீரர்களை ஏற்றிவந்த கப்பல் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த முற்பட்டனர். அக்கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்கிக்கொண்டு டோராப் படகுகளில் வந்த படையினர் தமது உயிர்களையும் இழந்து புலிகளின் தாக்குதல்களை முறியடித்து அந்த 710 படையினரின் உயிரைக் காப்பாற்றினர். அவர்களின் வீரம் பாராட்டத்தக்கது. இந்தச் சம்பவம் உட்பட அனைத்து வன்முறைகளும் புலிகளால் நடத்தப்பட்டது பொய்யான யுத்தநிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தவேளையில்தான் என்பதை நாம் மறக்கக்கூடாது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்பு நான்கு பாரிய வன்முறைச் சம்பவங்களில் புலிகள் ஈடுபட்டனர்.

# வடக்கே செல்லும் வாகனங்களுக்கு ஓமந்தையில் படையினர் கட்டுப்பாடு

## பொருளாதாரத் தடைக்கான முன்னேற்பாடா?

வவுனியாவிலிருந்து வடக்கே - யாழ்ப்பாணம் மற்றும் வன்னி ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் வாகனங்களை படையினர் கடந்த சில தினங்களாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே ஓமந்தை சோதனைச் சாவடியூடாக அனுமதிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பகுதிகளுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் உட்பட சகலவிதமான அத்தியாவசியப் பொருள்களும் ஏ-9 வீதியூடாக வாகனங்களிலேயே கொண்டு செல்லப்படுகின்றன.

பல்வேறு வகையான பொருள்களை ஏற்றிக்கொண்டு நாளாந்தம் பல நூற்றுக்கணக்கான வாகனங்கள் ஓமந்தை சோதனைச் சாவடியைக் கடந்து வடக்கே செல்வது வழமை.

ஆனால், கடந்த சில நாள்களாகப் படையினர் தினமும் முப்பதுக்கும் குறைவான வாகனங்களையே உட்செல்ல அனுமதிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால், வடக்கே கொண்டுசெல்வதற்கென பல்வேறு வகையான பொருள்களை ஏற்றியபடி ஏராளமான வாகனங்கள் ஓமந்தையில் வரிசையாகத் தரித்துநிற்கின்றன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னி மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடையை விதிக்கும் படையினரின் எதேச்சாதிகார முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே இது இருக்கலாம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (க)

# தேசியப்பற்றும் விடுதலைத் தெளிவும் மிகையாக கொண்டிருந்தவர் ரமணன்

## புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் புகழாரம்

தமிழீழத் தேசியத்தின்பால் கொண்டிருந்த பற்றுறுதியும், விடுதலை என்பதில் பூரணமான தெளிவும் மிகையாகக் கொண்டிருந்தவர் தளபதி கேணல் ரமணன். கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினரின் 'சினைப்பர்' தாக்குதலில் பலியான தளபதி ரமணனுக்கு இவ்வாறு புகழாரம் சூட்டியிருக்கிறார் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான்.

இது தொடர்பாகதமிழீழத் தேசியத்தொலைக்காட்சிக்கு கருத்து தெரிவித்தபோது அவர் கூறியதாவது:-

கேணல் ரமணனின் சிறந்த செயற்பாடுகள் காரணமாக அவரை எமது புலனாய்வுத் துறையிலே இணைத்துப் புலனாய்வுச் செயற்பாட்டாளராக இணைக்க நான் விரும்பினேன். ஆனால், மாவட்ட தேவை கருதி அங்கொரு படைத்துறைப் புலனாய்வுச் செயற்பாட்டாளராகத் தனித்துவமாகச் செயற்பட்டு வந்தார்.

ரமணனை எனக்கு மிக நீண்ட நாள்களாகத் தெரியும். 1987 இன் ஆரம்பத்தில் ... லது அதற்கு முன்னைய காலப்பகுதியில் என்று நினைக்கிறேன். மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைக்கு அண்மையாகவுள்ள அம்பிலாந்துறைக் கிராமத்தில் ஸ்ரீலங்காப் படையினருடைய நகர்வொன்றைத் தடுத்து நடத்திய சண்டையொன்றிலேயே எம்முடன் சேர்ந்து ஸ்ரீலங்காப் படையினரின் நகர்வினைத் தடுப்பதிலே இணைந்து செயற்பட்டிருந்தார். அவ்வேளையில் அவர் நீகனின் அணியிலே ஒரு போராளியாகச் செயற்பட்டிருந்தார்.

மட்டக்களப்பு - அம்பாறை காடு - மேடுகள், வயல்வெளிகள் எல்லாவற்றிலும் நாம் நீண்ட பயணங்களை நீண்ட நாள்கள் ஒன்றாகச் செய்திருந்தோம். பல்வேறு நடவடிக்கைகளிலே அவர் சேர்ந்து செயற்பட்டிருந்தார். அவ்வேளையில் அவர் நீகனின் அணியிலே ஒரு போராளியாக அதன்பின்னர் நீகனின் அணியிலே ஒரு பகுதிப் பொறுப்பாளராகச் செயற்பட்டிருந்தார்.

அவரது குடும்பத்தினரதும் போராட்டப் பங்களிப்புகள் பற்றி ... தெரியும். அதைத் தொடர்ந்து அவரது சிறந்த செயற்பாடுகள் காரணமாக அவரை எமது புலனாய்வுத் துறையிலே இணைத்துப் புலனாய்வுச் செயற்பாட்டிலே ஒருவராக இணைக்க நான் விரும்பியிருந்தேன். ஆனாலும், மாவட்டத்தின் தேவை கருதி அங்கே ஒரு படைத்துறைப் புலனாய்வுச் செயற்பாட்டாளராக அவர் தனித்துவமாகச் செயற்பட்டிருந்தார்

அவர் படைத்துறைப் புலனாய்வுச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த காலத்திலே வெற்றிகரமான பல நடவடிக்கைகளைச் செய்திருந்தார். அவற்றில் நான் நேரடியாகத் தொடர்புபட்டிருக்காத போதிலும் கூட அவருடைய நடவடிக்கைகள் எனக்கு வியப்பையும், பெருமையையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தத்தக்க வெற்றிகளை அவர் பெற்றிருந்தார்.

குறிப்பாகச் சொல்வதானால், ஸ்ரீலங்கா அதிரடிப்படை அதிகாரி சகபந்து என்பவர் மீது ஒரு வெற்றிகரமான கரும்புலி நடவடிக்கையையும், அதனைத் தொடர்ந்து இன்று கருணா போல அன்று செயற்பட்ட ராசிக் என்ற துரோகி மீதான வெற்றிகரமான கரும்புலித் தாக்குதல் நடவடிக்கைகளையும் அவரது புலனாய்வுச் செயற்திறன் சார்ந்த வெற்றிகளாக மிக முக்கியமாகக் குறிப்பிடலாம்.

கருணாவின் துரோகம் வெளிப்பட்ட வேளையிலே ரமணன் அதிர்ச்சியுற்றிருந்தார். இவ்வாறு துரோகத்திற்கான செயற்பாட்டை மனதிலே வைத்துக்கொண்டு இந்த மனிதரால் எவ்வளவு தூரம் இவ்வாறு நடிக்க முடிந்தது என அவர் ஆச்சரியப்பட்டிருக்கின்றார்.

அந்தத் துரோகத்தை முறியடிப்பதிலே தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தார். மிக ஆபத்தான பணிகளை பொறுப்பேற்றுக் களத்திலே இறங்கியிருந்தார். அது எல்லோருக்கும் தெரியும்.

தமிழீழத் தேசியத்தின்பால் அவர் கொண்டிருந்த மாறாத பற்றுறுதியும் விடுதலை என்பதில் அவருக்கிருந்த பூரணமான தெளிவும் தான் அவ்வாறான தெளிவான முடிவுகளை எடுப்பதற்கு ஆபத்தை எதிர்கொள்வதற்கும் அவருக்கு உறுதுணையாக இருந்தவை யென்றால் மிகையில்லை.

- என்றார் பொட்டு அம்மான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர்பகிர்வும் நினைவஞ்சலியும்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி பா.வர்ணகுலராஜா
அவர்களின் பாசமிகு மாமன்

**அமரர் கணபதிப்பிள்ளை குமாரசாமி**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்கள் கடந்த 27-04-2006 இல் இறைபதம் எய்தியமையையிட்டு, துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயர் துடைப்பில் பங்கு கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய நாமும் பிரார்த்திக்கிறோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**யா/கைதடி நுணாவில், அ.த.க.பாடசாலை.**

(50334) (26.15.14)

## கூட்டம்

தீவக கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீவக கல்வி வலய ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது. உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு அதிபர்களை தீவக கல்வி வலயப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் கேட்டுள்ளார். (204)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
01 - 10 - 1986



ஆண்டவன் அடியில்
14 - 04 - 2006

### அமரர் சிவராஜா மயூரன்

கடந்த 14-04-2006 அன்று வி ்த்தில் சிவபதமடைந்த எமது மூத்த புத்திரன் மயூரனுடைய மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் தந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரி ்ந்தோருக்கும் மற்றும் உதவிகள் பல புரிந்த நல் உள்ளங்களுக்கும் உற்றார், உறவின ் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை (28-05-2006) ஞாயிற்றுக்கிழமை அவரது சித்தப்பா கனகராசாவின் 9/6, 4ஆம் குறுக்குத்தெரு, வேம்படி றோட், ஈஞ்ஞா.சிவலிங்கம் வைத்தியசாலை அருகாமையில் உள்ள இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவராஜா இராசமலர் குடும்பத்தினர்.
தம்பியாரின் குடும்பத்தினர்,
கனகராசா யொப்சி குடும்பத்தினர்,
9/6, 4ஆம் குறுக்குத் தெரு,
வேம்படி றோட், யாழ்ப்பாணம்.

எமது அன்பு மகனுடைய
ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்:
பெற்றோரும், சகோதரர்களும்.

(50385) (26.14.15)

உ
சிவமயம்



### கரணவாய் மேற்கு கல்லுவம் ஸ்ரீ ஞான வைரவ சுவாமி ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி பஞ்சகுண்டபக்ஷ நவோத்தரசஹஸ்திர

## சங்காபிஷேகப் பெருவிழா

காலம்: இன்று(27-05-2006) வைகாசித் திங்கள் 13ஆம் நாள் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு வைரவப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

* **சங்காபிஷேக பிரதம குரு:**
  சிவாகமகிரியா கலாநிதி ஆகமக்கிரியா தத்துவநிதி அருள்ஞானக்கிரியாமணி சிவஸ்ரீ பாலகிருஷ்ணக் குருக்கள் (பிரதம குரு, ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோயில், கொம்மந்தறை, உடுப்பிட்டி)
* **ஆசியுரை:**
  ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் (நல்லை ஆதீனம்)
* **வாழ்த்துரை:**
  கவிமாமணி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் B.A.(HONS) (ஆசிரியர், யா/ஸ்ரான்லிக்கல்லூரி, யாழ்ப்பாணம்)

**பட்டம் வழங்கிக் கௌரவித்தல்**

கும்பாபிஷேக, மண்டலாபிஷேக, சங்காபிஷேக பிரதம குருவாக விளங்கிய சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக் குருக்கள் அவர்களுக்கு "கிரியாக்கிரஜோதி" எனும் பட்டம் வழங்கிப் பாராட்டும் நிகழ்வு

* **மங்கள வாத்தியம் (பகல், இரவு)**
  ப.சிவரத்தினம் குழுவினர்; L.S.ஜெகநாதன் குழுவினர், M.S.தட்சனாமூர்த்தி குழுவினர்
* **அன்னதானம்**
  பகல் 12 மணிக்கு (மகேஸ்வரபூசை) அன்னதானம் வழங்கப்படும்.
* மாலை 5 மணிக்கு திருவூஞ்சல் தொடர்ந்து மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட முத்துச்சப்பரத்தில் எம்பெருமானின் திருவீதியுலா நடைபெறும்.

**இரவுத்திருவிழா**

*இரவு 6 மணிக்கு கலை நிகழ்ச்சிகள்:*

* மேளக்கச்சேரி
* வில்லிசை:- வழங்குபவர் கலை ஞானமாமணி க.சத்தியதாஸ் குழுவினர்
  விடயம்:- "பார்வதி கல்யாணம்"
* இன்னிசைக் கானங்கள்
  வழங்குபவர்:- அருணா இசைக்குழுவினர்

**சங்காபிஷேக உபயகாரர் வேலுப்பிள்ளை சபாபதி குடும்பத்தினர்**
**கல்லுவம், கரணவாய் மேற்கு, கரவெட்டி.**

(இ/49408) (26.14.15)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



பண்பிலே சிறந்தவனே!
பார் போற்றும் உத்தமனே!!
சன்னமாக வந்த காலன் - உனை
சாவடித்த காரணம் யாதோ?

சடுதியாக நீ மறைந்த செய்தி கேட்டு
கதி கலங்கி வாடுகின்றோம்...
பதறுகின்றோம் உன் பிரிவால்
பரிதவிக்கின்றோம் நின் இழப்பால்...

மாதங்கள் ஒன்றரை ஓடி மறைந்தாலும்
மாறாது உந்தன் நினைவுகள் -எம்
நெஞ்சில் உயிர் உள்ளவரை - நித்தமும்
வேண்டுகின்றோம் உன் ஆத்மா சாந்திக்காய்...

## பஞ்சாட்சரம் கிருபாகரன்

(உரிமையாளர் - சாரங்கன் நகைமாடம்)

அன்னையின் மடியில் : 11.01.1970

ஆண்டவன் அடியில் : 13.[illegible]

**என்றும் உன் நினைவால் துயருறும் நண்பன்**

**செ.சிவராசா [சிறி] குடும்பம்.**

**சிறி வெற்றிலைக் கடை,**
**மார்க்கட் உட்புறம்,**
**கொடிகாமம்.**

(50530) (23.14.15.26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு வைத்தியசாலைகளுக்கு 'நிக்கொட்' உதவியுடன் கட்டடங்கள்

'நிக்கொட்' திட்டத்தின்கீழ் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மனநோயாளர் பிரிவிற்கான புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுமதி பெறப்பட்டு தற்போது இதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட 'நிக்கொட்' பிரதித்திட்டப் பணிப்பாளர் க.நவரத்தினராசா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் புதிய ஆண், பெண் விடுதிகள், நிர்வாகத் தொகுதி, நீர் விநியோகப் பகுதி ஆகியவற்றுக்கான கட்டட நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாவனைக்கு உதவாத பருப்புக்கு பதிலாக தரமானதுவழங்கப்படும்

## தென்மராட்சிப் பிரதேச செயலர் ஏற்பாடு

தென்மராட்சி,மே27

சமுர்த்தி நிவாரணப் பொருள்கள் விநியோகத்தின்போது வழங்கப்பட்ட பாவனைக்குதவாத பருப்பினை சங்கக் கிளைக் கடையில் கையளித்துத் தரமான பருப்பினைப் பெற்றுக்கொள்ளுமாறு தென்மராட்சிப் பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.

பொதுமக்கள் கொடுத்த முறைப்பாடுகளையடுத்து வழங்கப்பட்ட பாவனைக்குதவாத பருப்புக்குப் பதிலாகத் தரமான பருப்பு வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 66 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது தொடர்பான முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் மேலதிகமாக அறவிட்ட பணத்தினை மீள வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (117)

# விஞ்ஞான, கணித பாட கலந்துரையாடல்

தென்மராட்சி,மே27

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கான செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் மூன்றாம் திகதியும் நான்காம் திகதியும் காலை 9 மணிக்கு வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மூன்றாம் திகதி விஞ்ஞான பாடத்திற்கும் மறுநாள் கணித பாடத்திற்கும் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இப்பாடங்களின் செயற்றிட்டத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களை உரிய ஆவணங்களுடன் சமூகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (117)

# ஆனைவிழுந்தானில் 200 வீடுகள் அமைக்க செஞ். அமைப்பு முடிவு

நல்லூர்,மே27

இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேச சம்மேளனமும் இணைந்து 200 வீடுகளை அமைக்கவுள்ளன.

இந்த வீடுகள் பருத்தித்துறை ஆனைவிழுந்தான் பகுதியில் அமைக்கப்படவுள்ளன.

இதுதொடர்பாக கொழும்பில் இருந்து வந்த சங்கத்தின் ஆலோசனையாளர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை குறிப்பிட்ட பகுதிக்குச் சென்று வீடுகள் கட்டுவதற்கான இடங்களைப் பார்வையிட்டனர்.

ஒருவாரம் வரை யாழ். நகரில் தங்கியிருக்கும் இவர்கள் வீடுகளை அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர் என இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். பிரிவு தெரிவித்துள்ளது. (111)

# வலி.தென்மேற்குப் பகுதியில் வெங்காயச் செய்கை தீவிரம்

வலி.தென்மேற்கு,மே27

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் தற்போது விவசாயிகள் வைகாசிப்போக வெங்காயச் செய்கையை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த தைப்போக வெங்காயச் செய்கையின் அறுவடை காலத்தில் எதிர்பாராத வகையில் இங்கு பெய்த பெருமழை மற்றும் வெள்ளத்தினால் வெங்காயச் செய்கை விவசாயிகளுக்குப் பலத்த நஷ்டத்தை ஏற்படுத்தியிருந்தது.

இம்முறை இப்பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் வைகாசிப் போக வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (135)

# கோப்பாய் மத்தியில் மின் தடையைத் தவிர்க்க ஒத்துழைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே27

கோப்பாய் மத்திப் பகுதியில் மின்மாற்றிகள் அடிக்கடி பழுதடையும் நிலை ஏற்படுகின்றமையால் உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று கோப்பாய் மத்தி மகாமுத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

தேவையற்ற வகையிலும் அளவுக்கதிமாகவும் அத்தியாவசிய தேவைகளுக்காகவும் மக்கள் மின்னைப் பயன்படுத்துவதால்தான் அடிக்கடி மின்தடை ஏற்படுகின்றது.

எனவே, மின்சாரத்தை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பாவனை செய்து மின்தடை ஏற்படுவதைத் தவிர்த்து மாணவர்கள் பரீட்சைக்குத் தயார் செய்ய அனைவரும் ஆதரவு வழங்கவேண்டுமென பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர்.

# சுயதொழில் ஊக்குவிப்புக்கு கடன் வழங்க ஏற்பாடு

வலி.தென்மேற்கு,மே27

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவிலுள்ள உயரப்புலம் - மாரீசன்கூடல் கிராம மக்களுக்கு சேவாலங்கா நிறுவனத்தினால் சுயதொழில் முயற்சி ஊக்குவிப்புக் கடன் வழங்கப்படவுள்ளது.

உயரப்புலம் - மாரீசன்கூடல் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு ஊடாக இக்கடனுதவி வழங்கப்படவுள்ளதாகவும் -

இதற்கான பயனாளிகள் தெரிவு தற்போது நடைபெற்று வருவதாகவும் - வலி. தென்மேற்குப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (135)



கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 47ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நிலைய மண்டபத்தில் மிக அமைதியாக நடைபெற்றது. இந்நிகழ்வில் நிலையக் கொடியை நிலையத்தின் தலைவர் சி.கந்தசாமி ஏற்றுவதையும் அருகில் நிலைய அங்கத்தவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: கைதடிச் செய்தியாளர்)

# பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணெய்

தென்மராட்சி கிழக்கு,மே27

கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் தற்சமயம் பங்கீட்டு அட்டைக்கு 2 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்றது.

பொதுமக்கள் முண்டியடித்து இவற்றினைப் பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதேவேளை, மேற்படி தலைமையக எரிபொருள் நிலையத்தில் மண்ணெண்ணெய் பெறுவதற்காக மக்கள் பெரும்ளவில் கூடி நின்றமை குறிப்பிடத்தக்கது. (122)

# வரணிப் பகுதியில் சிறுதானியச் செய்கை

தென்மராட்சி கிழக்கு,மே27

வரணிப் பிரதேசத்தில் தற்சமயம் அறுவடை செய்யப்பட்ட பயறு, கௌபி போன்ற சிறுதானியப் பொருள்கள் விவசாயிகளால் விற்பனை செய்யப்படுகின்றன.

கடந்த போக நெல் அறுவடையின் பின்னர் பயிரிடப்பட்ட இப்பயிர்கள் மூலம் சிறந்த அறுவடை கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எருவன் வயல்வெளி, குமரணி வயல்வெளி, வரணி இயற்றாலை சவனார் வயல்வெளி ஆகிய இடங்களில் பயிரிடப்பட்ட சிறுதானியப் பயிர்களே அறுவடை செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. கௌபி கிலோ ரூபா 60இற்கும் பயறு ரூபா 100இற்கும் விற்பனை செய்யப்படுகின்றன. (122)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை அமுலுக்கு வருமானால் போரை ஆரம்பிக்குமாறு புலிகளை வலியுறுத்துவோம்!

## யாழ். வந்த நோர்வேத் தூதரிடம் பல்கலை. மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே27

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை அமுலுக்கு வரும் பட்சத்தில் மீண்டும் முழு அளவிலான போரை ஆரம்பிக்குமாறு விடுதலைப் புலிகளுக்கு வலுவான அழுத்தத்தைக் கொடுப்போம். இவ்வாறு அழுத்தத்தைப் பிரயோகிப்பதைத் தவிர வேறு வழி எமக்குத் தெரியவில்லை.

அண்மையில் யாழ். வருகை தந்த இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரிடம் இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ்.பல்லைக்கழக மாணவர் ஒன்றியம்.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் யாழ். மாவட்டச் செயலகத்தில் வைத்து நோர்வேத் தூதுவரிடம் கையளித்த மகஜரில் -

தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய நாடுகளில் தடைசெய்வதென்ற தீர்மானத்தை ஐரோப்பிய யூனியன் நடைமுறைப்படுத்தவுள்ள இந்தத் தருணத்தில் இலங்கைத் தீவின் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அனுசரணையாளராகச் செயற்பட்டுவரும் தங்கள் நாட்டு அரசாங்கத்திற்குத் தங்களூடாக முக்கிய முடிவு ஒன்றினைத் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் ஸ்ரீலங்கா அரசு இப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் சிறிதளவாவது முன்னோக்கி நகர்ந்ததாக நாம் கருதவில்லை.

மாறாக அது சர்வதேச சமூகத்திற்கு பொறுப்புக் கூறவேண்டிய சூழ்நிலைக்குள் எமது பிரதிநிதிகளைத் தள்ளி தமிழ் மக்களைச் சுற்றி அவர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடமுடியாதவாறு ஒரு சர்வதேச வலைப்பின்னலை உருவாக்கும் தனது தந்திரோபாயத்தில் கணிசமான அளவு முன்னோக்கி நகர்ந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது விதிக்கவுள்ள தடை ஸ்ரீலங்கா அரசின் தந்திரோபாயத்துக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகும் என்பதோடு நான்கு ஆண்டுகாலம் தங்கள் நாட்டு அரசாங்கம் இதயசுத்தியோடு மேற்கொண்டு வந்த சமாதான முயற்சிகளுக்கு இது மிகப் பெரிய பின்னடைவாகும்.

ஸ்ரீலங்கா அரசு, இராணுவத்தினரும் கடற்படையினரும், அரசு வெளிவிவகார அமைச்சரும் கொல்லப்பட்டபோது காட்டிய அக்கறையைத் தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளின் பிரதேச தளபதிகளும் தலைவர்களும் கொல்லப்பட்டபோது சர்வதேச சமூகம் காட்டாமை எமக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது. இந்த அறிக்கை வரைந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில் கூட விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகளில் ஒருவரான ரமணன் கொல்லப்பட்டுள்ளார்.

ஜனவரியில் இடம்பெற்ற ஜெனீவா உடன்படிக்கையை ஸ்ரீலங்கா அரசு கடைப்பிடிக்கத் தவறியதோடு திருகோணமலைத் தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரனைக் கொன்றதன் மூலம் மீண்டும் ஒரு வன்முறையை வடக்கு - கிழக்கில் ஸ்ரீலங்கா அரசே ஆரம்பித்து வைத்தது. வடக்கு - கிழக்கில் ஸ்ரீலங்கா அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாக அப்பாவி மக்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருவது தொடர்பில் ஸ்ரீலங்கா அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தமொன்றையும் பிரயோகித்ததாக எமக்குத் தெரியவில்லை.

இலங்கைத் தீவிலுள்ள தமிழ் மக்களாகிய நாங்கள் 30 ஆண்டு காலமாக தமது உரிமைகளுக்காக அகிம்சை வழியில் போராடி இறுதியில் தமது உயிர்களையும் பாரம்பரிய பிரதேசங்களையும் பாதுகாக்க வேறு வழியின்றி ஆயுதம் ஏந்தியுள்ளோம். பெரும் இழப்புகளுக்கு மத்தியில் எமது பாரம்பரிய பிரதேசத்தில் கணிசமான பகுதியை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தோம். உயிரிழப்பும் பொருள் அழிவுமின்றி இரு பகுதியினருக்கும் பேச்சு மூலம் இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வொன்றை எட்டலாம் என்ற நம்பிக்கையை அனுசரணையாளராகக் கடமையாற்ற முன்வந்த தங்கள் தேசம் எமக்கு ஏற்படுத்தியிருந்தது. நாம் இன்று முழுமையாக நம்பிக்கை இழந்துள்ளோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை அமுலுக்கு வரும் பட்சத்தில் மீண்டும் முழு அளவிலான போரை ஆரம்பிக்குமாறு எமது பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வலுவான அழுத்தம் கொடுப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. வேறு வகைகளில் எம்மையும் எமது பிரதேசங்களையும் பாதுகாக்க முடியாது என்று நாம் கருதுவதாலேயே இந்த முடிவுக்கு வந்துள்ளோம். தயவு செய்து எமது முடிவினைச் சர்வதேச சமூகத்திற்குத் தெரியப்படுத்துங்கள் - என்றுள்ளது.

இதற்கிடையில் -

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், சர்வமதக் குழு, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், மனித நேய அமைப்புகளின் ஒன்றியம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகளும் யாழ். மாவட்டச் செயலகத்தில் அன்றையதினம் நோர்வேத் தூதரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதுடன் மகஜர்களையும் கையளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் நினைவலைகள்



அமரர்

## பஞ்சாட்சரம் கிருபாகரன்

(உரிமையாளர் -
சாரங்கன் நகைமாடம்
45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்)

**27.05.2006**

மண்ணில் :- 11-01-1970

விண்ணில் :- 13-04-2006

அழுது அழுது விழிகள் ஆறாகிப் போச்சு!
அழகு திருமேனி நீறாகிப் போச்சு!
பால் சுரந்த தாய் மார்பில்
குருதி அல்லோ கசியுது! - உனைச் சுமந்த
கருவறையோ கலங்கியே வாடுது

ஐயகோ! பாவிகள் எங்கள் சூரியனை
சுடுகாட்டில் ஆகுதி ஆக்கி விட்டார்கள்
இருளுக்குள் எங்களைப் பூட்டிவிட்டார்கள்
இனிவரும் நாள் எல்லாம் துயர் மிகு நாளன்றோ!
துயில் கொள்ள விழிகளில் எரியுது தீ அன்றோ!

இனியவனே! மறுமுறை ஒருதரம் பிறந்திடு
எம் மடிதனில் சுமந்திடும் வரம் கொடு
ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்.

'கண்டி வீதி'
சாவகச்சேரி.

**- குடும்பத்தவர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரான் - பாகிஸ்தான் அணுசக்தி விவகாரம் குறித்துப் பேச்சு

இஸ்லாமாபாத்,மே 27

ஈரான் மற்றும் பாகிஸ்தானுக்கிடையே இரு தரப்பு வர்த்தகம் மற்றும் அணுசக்தி பிரச்சினை ஆகியவை குறித்த பேச்சுவார்த்தை கடந்த புதன்கிழமை இஸ்லாமாபாத்தில் தொடங்கியது. ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் இரண்டு நாள் பயணமாக கடந்த புதன் கிழமை பாகிஸ்தான் சென்றுள்ளார். அவர்பாகிஸ்தான் வெளியுறவுத்துறை பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துகிறார். அதன் பின்னர் அதிபர் முஷாரப், பிரதமர் சௌகத் அஸிஸ் ஆகியோரையும் அவர் சந்திக்கவுள்ளார்.

## பிரிட்டனில் வசிப்பதற்கு மைக்கல் ஜக்சன் விருப்பம்

லண்டன்,மே 27

பிரிட்டனில் வசிக்க விரும்புவதாக பிரபல பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜக்சன் தெரிவித்துள்ளார். பிரிட்டனைத்தான் அதிகம் விரும்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

'டெய்லி மிரர்' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் அவர் கூறியுள்ளதாவது:-

'இன்விசிபில்' என்ற பெயரில் புதிய இசை அல்பம் தயாரித்து வருகிறேன். வியாபார விடயமாக கடந்த சில தினங்களாக இங்கு (பிரிட்டன்) தங்கி உள்ளேன். இந்த நாடு என்னை மிகவும் கவர்ந்துள்ளது - என்றார்.

# இந்தியாவுடன் அணுசக்தி உடன்பாட்டுக்கு அமெ. நாடாளுமன்றம் அனுமதிக்க வேண்டும்

## சர்வதேச நிறுவனத் தலைவர் வேண்டுகோள் ஈரானுடன் பேசுமாறும் அவர் கோரிக்கை

வாஷிங்ரன்,மே 27

**இந்தியாவுடனான அணுசக்தி உடன்பாட்டுக்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டும், எனச் சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் தலைவர் முகமது எல்பராடி கூறியுள்ளார்.**

அமெரிக்க அதிபர் புஷ் சில மாதங்களுக்கு முன் இந்தியா வந்திருந்தபோது இரு நாடுகளுக்கு இடையே அணுசக்தி உடன்பாடு ஏற்பட்டது. அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடவில்லை. இதனால் அணுசக்தி திறன்கொண்ட நாடுகள் இந்தியாவுக்கு இந்த விடயத்தில் ஒத்துழைப்பு அளிப்பதில்லை. அணுசக்தி மூலம் மின்சாரம் தயாரிக்க யுரேனியம் தேவைப்படுகிறது. ஆனால், இந்தியாவுக்கு யுரேனியம் விநியோகம் செய்யக் கூடாது என்ற தடை 30 ஆண்டுகளாக உள்ளது.

அமெரிக்காவுடனான அணு சக்தி உடன்பாட்டுக்கு ஒப்புதல் கிடைத்தால், இந்தியா மீதான 30 ஆண்டு தடைக்கு ஒரு முடிவு ஏற்படும்.

சர்வதேச அளவில் அணுஆய்வில் ஈடுபடும் நாடுகளை கண்காணிக்கும் பணியில் சர்வதேச அணுசக்தி நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இதன் தலைவர் முகமது எல்பராடி. இவர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலீஸா ரைஸுடன் வாஷிங்ரனில் பேச்சு வார்த்தை நடத்தினார். அப்போது இந்திய உடன்பாடு குறித்தும் பேசப்பட்டது.

பின்னர் நிருபர்களிடம் முகமது எல்பராடி கூறுகையில்,'' அமெரிக்கா மற்றும் இந்தியா இடையே ஏற்பட்டுள்ள உடன்பாடு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த உடன்பாடு நிறைவேற்றப்பட்டால் அமெரிக்கா மற்றும் பிற நாடுகளிடம் இருந்து அணு தொழில் நுட்பத்தை இந்தியா பெறமுடியும். இந்தியாவுடனான உடன்பாட்டை ஒரு வெற்றி ஒப்பந்தமாகவே நான் கருதுகிறேன். இதற்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டும்,'' என்றார்.



அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலீஸா ரைஸ் கூறுகையில்:-

''இந்தியாவுடனான உடன்பாடு குறித்து நாங்கள் பேசினோம். அணு ஆயுதப் பரவல் தடையை மேலும் விரிவுப்படுத்த இந்த உடன்பாடு உதவும் என்பது எங்கள் கருத்தாக உள்ளது,'' என்றார்.

இதேவேளை - ஈரானின் அணுசக்தி ஆய்வு குறித்தும் கொண்டலீஸா ரைஸுடன் எல்பராடி பேசினார்.

இது குறித்து அவர் கூறியதாவது:-

அணுசக்தி ஆய்வு குறித்து ஈரானுடன் அமெரிக்கா நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தினால் பல பிரச்னைகள் தீரும். ஆனால், இது குறித்து முடிவு செய்ய வேண்டியது அமெரிக்கா தான். ஈரான் நாட்டின் கருத்துக்களை கொண்டலீஸா ரைஸுக்கு தெரிவித்துவிட்டேன். ஈரானின் கருத்து அமெரிக்காவின் கருத்துக்கு மாறாகவே உள்ளது. மின்சார உற்பத்திக்குத் தான் அணுசக்தி ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது என்ற நம்பிக்கையை சர்வதேச சமூகத்திடம் ஏற்படுத்த வேண்டியது ஈரானின் பொறுப்பே - என்றார்.

# பறவைக்காய்ச்சல் காரணியைக் கண்டுபிடிக்க ஆய்வுகூடம் அமைத்துள்ளது அமெரிக்கா

ஏம்ஸ்,மே 27

பறவைக்காய்ச்சல் நோய் பரவினால் அதைக் கண்டு பிடிக்கவும், தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் அமெரிக்கா தயாராகிவிட்டது. இதற்காக விசேடமாக ஒரு ஆய்வுகூடம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பறவைக்காய்ச்சல் நோய் பல நாடுகளில் பெரும் சிக்கலை ஏற்படுத்தி வருகிறது. பறவைக்காய்ச்சல் நோய்க்குக் காரணமான 'எச் 5 என் 1' என்ற வைரஸ் நோய் மிக கொடூரமான ஒன்றாகக் கருதப்படுகிறது. கடந்த 2003ஆம் ஆண்டு முதல் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் இவ்வகை வைரஸ் கிருமிகள் பரவி பறவைக்காய்ச்சல் நோய் பாதிப்பு ஏற்பட்டது. இதனால், 124 பேர் இறந்துள்ளனர்.

தற்போது இந்நோய், பறவைகளில் இருந்து மனிதர்களுக்கு பரவி வருகிறது. மனிதர்களில் இருந்து மற்றொரு மனிதருக்கு பரவுவது மிகவும் அபூர்வமாக கருதப்படுகிறது. இதுபோல் பரவினால் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுவர் என விஞ்ஞானிகள் அஞ்சுகின்றனர். உலகளவில் இந்தோனேசியாவில் மட்டுமே மனிதரில் இருந்து மனிதருக்கு பறவைக்காய்ச்சல் நோய் பரவி இருப்பதை உலக சுகாதார கழகம் கண்டுபிடித்துள்ளது.

உலகளவில் பறவைக் காய்ச்சல் நோய் பீதி இருப்பதால் அதை எதிர்கொள்ள அமெரிக்காவும் தயாராகிவருகிறது. இதற்காக ஐவோவா மாகாணத்தில் ஏம்ஸ் நகரத்தில் விசேட ஆய்வுகூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகூடம் அமெரிக்க விவசாயத்துறை கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது. இங்கு விசேட பயிற்சி பெற்ற நிபுணர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் பறவைக்காய்ச்சல் நோய் இதுவரை பரவவில்லை. அந்நோய் பரவியுள்ளது என்பதை இறுதி செய்து அறிவிக்கும் மையமாக இந்த ஆய்வுகூடம் நிறுவப்பட்டுள்ளது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# மன்னரின் செலவைக் குறைக்க நேபாள அரசு புதிய திட்டம்

நேபாளத்தில் மன்னர் குடும்பத்தின் செலவை மற்றும் ராணுவச் செலவை குறைக்க கொய்ராலா தலைமையிலான அரசு திட்டமிட்டுள்ளது. நேபாள நாடாளுமன்றத்தில் நேபாள கம்யூனிஸ்ட் உறுப்பினர் பரத்மோகன் அதிகாரி கொண்டுவந்த தீர்மானத்துக்கு நிதித் துறை அமைச்சர் ராம்சரண்மகாத் பதிலளிக்கையில் கூறியதாவது:-

அடுத்த பட்ஜெட்டில் மன்னர் மற்றும் ராணுவ செலவுக்கான நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படமாட்டாது. மன்னர் ஞானேந்திராவின் நேரடி ஆட்சியின்போது அரச மாளிகைக்கான ஆண்டு செலவு ரூ.39 கோடி 15 லட்சம் இந்திய ரூபாவாக உயர்த்தப்பட்டது. மன்னர் ஆட்சியில் அரசின் நிதி தவறாக பயன்படுத்தப்பட்டது. இது தொடர்பாக விசாரணை நடத்தி குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

மன்னர் மாளிகைக்கான செலவு மற்றும் ராணுவச் செலவு எதையும் இனி புதிய அரசு உயர்த்தாது. ஜூன் மாதம் மத்தியில் புதிய பட்ஜெட் தாக்கல் செய்யப்படும். இதில் புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்படும். மேலும் ஏழைகள் பயன் அடைவதற்கான திட்டங்கள் அறிவிக்கப்படும். - என்றார்.

# அணுசக்தி மூலமான மின்சாரத்துக்கு புஷ் ஆதரவு

''சுற்றுச்சூழலை பாதிக்கும் வாயுக்களைத் தவிர்க்க அணுசக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் முறைக்கு கூடுதல் ஆதரவு தரவேண்டும்,'' என அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் பென்சில்வேனியாவில் உள்ள பாட்ஸ்டவுன் நகரில் அணு உலை நிலையம் ஒன்றை அதிபர் புஷ் தொடக்கி வைத்தார். அப்போது அவர் கூறியதாவது:-

பொருளாதார பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு கூடுதல் அணு உலைகளைத் திறக்க அமெரிக்கா முயற்சிக்க வேண்டும். அணுசக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது. மேலும், அணுசக்தி நிலையம் பாதுகாப்பான திட்டம் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். சுற்றுச்சூழல் பாதிப்புக்கு மனிதர்கள் காரணமா, இயற்கை சீரழிவுகள் காரணமா என்ற விவாதத்தை புறக்கணித்து விடுவோம். மாற்று எரிசக்தி முறைகளைப் பயன்படுத்துவது குறித்து பேசுவோம் - என்றார்.

# நடிகை ஐஸ்வர்யாராய் மரணமானதாக வதந்தி



## ரசிகர்கள் மத்தியில் பரபரப்பு

புதுடில்லி,மே 27

பிரபல நடிகை ஐஸ்வர்யா ராய் கார் விபத்தில் மரணமடைந்து விட்டார் என இணையத்தளம் வெளியிட்ட செய்தியால் நேற்று முன்தினம் 'திடீர்' பரபரப்பு ஏற்பட்டது.

'ஸ்வெல் சேர்வர்' என்ற இணைய தளத்தில் நேற்றுமுன்தினம் நடிகை ஐஸ்வர்யா ராய் குறித்த செய்தி வெளியானது. ஸ்வெல் சேர்வர்' இணையத் தளத்தில் முக்கிய செய்தி என்ற பெயரில் கார் விபத்தில் ஐஸ்வர்யா ராய் மரணம் என்று செய்தி வெளியிடப்பட்டிருந்தது. பிரபல நடிகை ஐஸ்வர்யா ராய் நெடுஞ்சாலை ஒன்றில் தனது நண்பரின் காரை ஓட்டிச் சென்றபோது திடீரென கார் கட்டுப்பாட்டை இழந்தது.

கார் பல முறை உருண்டு விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்திலேயே ஐஸ்வர்யா ராய் உயிரிழந்தார் என்று நெடுஞ்சாலை பாதுகாப்புப் பிரிவு பொலீஸார் கூறியதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இச்செய்தி ஐஸ்வர்யாவின் ரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்தது. இதன் கீழே குறிப்பு என்று போட்டு இந்த செய்தி நூறு சதவீதம் உண்மை அல்ல. இணையத் தளத்தை பார்ப்பவர்களின் பொழுதுபோக்குக்காகக் குறும்புக்கார இளைஞர்கள் இச்செய்தியை உரு வாக்கியுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த செய்தியை பார்த்ததும் ஏராளமான வாசகர்கள் பத்திரிகை அலுவலகங்களுக்கு தொடர்பு கொண்டு இது உண்மையா? எனக் கேட்டறிந்தனர். ஐஸ்வர்யா ராய் மரணமடைந்து விட்டார் என்று புரளி கிளப்பிவிடப்பட்ட அதே நாளில் அவர் சென்னையில் தான் இருந்தார். நல்ல உடல் நிலையுடன் இருக்கும் அவர் இயக்குநர் மணிரத்னத்தின் புதிய படமான 'குரு'வில் நடித்துக் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



பாப்பரசர் 16ஆம் பெனடிக்ற் போலந்துக்கு நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அவர் விசேட விமானத்தில் இருந்து இறங்குவதையும் புனித யோவான் பேராலயத்தில் திருப்பலி [illegible]

# தாய்லாந்தில் 100பேர் பலி!

பாங்கொங்,மே27

தாய்லாந்தில் கடும்மழை மற்றும் வெள்ளத்துக்கு 100 பேர் பலியாகினர். 61 பேரைக் காணவில்லை. பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று கூறப்படுகின்றது.

வடக்கு தாய்லாந்தின் 5 மலைப்பகுதி மாகாணங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் கனத்த மழை பெய்துவருகிறது. இதனால் பல இடங்களில் வெள்ளப்பெருக்குடன் நிலச்சரிவும் ஏற்பட்டுவருகிறது. சுமார் 1200 பேர் மட்டுமே பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்ட நிலையில் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு தாய்லாந்தின் உத்தாராதித் மாகாணம் மழையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் 100இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. இந்நிலையில், வெள்ளம் பாதித்த பகுதிகளில் நடைபெற்றுவரும் நிவாரணப் பணிகளை அந்நாட்டுப் பிரதமர் தாக்சின் ஷின்வத்ரா கடந்த புதன்கிழமை பார்வையிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

தொலைத்தொடர்பு நிலையத்திற்குரிய அடைப்புப் பெட்டியுடன், ரெலிகொம் தொலைபேசி இணைப்பு, வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 222 5473. 86/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (50503)

### கார் விற்பனைக்கு

ரொயாடோ கொறல்லா 18 - xxxx (Full Option) மிகவும் சிறந்த் நிலையில் சொந்தப் பாவனையிலுள்ள கார் சகல ஆவணங்களுடன் விற்பனைக்குண்டு. பார்வையிடுதல் 61, மணல்தறைலேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (50510)

### நாய்கள் விற்பனை

அல்சேஷன் ஒரு வயது விற்பனைக்குண்டு. அத்துடன் Dobermen, Greatdane, German shepped, Dalmation, Labrador, Rotweiler, Cocker spaniel, Dashund, Boxer, Japanese spitz KASL Registered (Pedegreed) கொழும்பிலிருந்து ஓடருக்கு எடுத்து தரப்படும். 21 Sengunthan Road, (கல்வியங்காடு சந்தைக்கு முன்) Thirunelvely East Thirunelvely. (50566)

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima No.1 Broiler குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். T.P.: 222 6944. (சி/49412)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடாவில் நிரந்தர குடியுரிமை உள்ள விவாகரத்துபெற்ற (3 வயதில் குழந்தையுண்டு) 1980 ஆம் ஆண்டு பிறந்த, பூசம் 8ஆம் பாதம் கிரகபாவம் 37¼ செவ்வாய் தோஷமற்ற பெண்ணுக்கு மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகம், சுயவிவரங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். S.கண்ணன் 177, Oldmoor Street, Colombo-12 T.P.0714353072. (50494)

### தேவை

மானிப்பாயில் வதியும் ஒரு குடும்பத்திலுள்ள ஆண் வயோதிபர் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்காக உதவியாளர் (ஆண்) தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: விளம்பர இல. 2875, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (50561)

### வீடு வாடகைக்கு தேவை

50,000/- முற்பணத்திற்குள் சகல வசதிகளுடனான வீடு வாடகைக்குத் தேவை. T.P. 0773501011 (50566)


**UNIVAC**
**Software Engineering Park**

**Fast Track Classes**

Software & Hardware சான்றிதழ் பயிற்சி நெறிகள் குறுகிய காலத்தில் (20 நாட்களும்) விரைவாக கற்பித்து உடன் சான்றிதழ் வழங்கப்படும்.

ஒவ்வொரு கிழமையும் புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம்

213, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

T.P: 077 6176476 Director


### அல்சேஷன் நா[illegible]க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன ஒன்றரை (1½) மாத அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. நேரில்வந்து பார்வையிட்டு பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி P.T. பாலன், இல.45, சிவகு[illegible] வீதி (பிறவுண் வீதியின் உட்பக்க லேன்) யாழ்[illegible] முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். [illegible]


**Organ/Violin Notes**

217 சினிமாப் பாடல்களுக்கான இசைக்குறிப்புகள், கேள்விஞானம், Theory, Key Board Exercise ஆகியன விற்பனைக்குண்டு!

**Karaweena Isai Manram**
131, Temple Road,
Nallur, Jaffna
T.P. 0777031293, 0713055991
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500 m தெற்கே)
(50322) (21.17.14)

**வெளிநாட்டு ஒழுங்குகளுக்கு**

ஐரோப்பியா, வட அமெரிக்கா, மத்தியகிழக்கு நாடுகளுக்கான பயண ஆலோசனைகளுக்கும், ஒழுங்குகளுக்கும்
தொடர்பு: T.P. 0714353000
(50492) (21.14.17)

**மலிவு விலையில்**
**விமானப் பயண ஒழுங்குகளுக்கு**
**யாழ்.- கொழும்பு-யாழ்.**

**THAMPI**
**தம்பி**

யாழ்.:-90, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:222-2040, 222-2504, 222-2823.
கொழும்பில்.:-296/D4, காலி வீதி, வெள்ளவத்தை.
தொ.பே.:0112360959, 0777 382343.
(50166)


### அபூர்வ ஜோதிடம்

அதி தீவிரமான நோய் விசேட மருந்தியலில் குணமாதல், உயர் அதிர்ஷ்ட கால பலன்களை அறிதல் தினமும் 8-2 p.m. உயரப்புல பிள்ளையார் கோயிலடி, விதானையார் வளவு, ஆனைக்கோட்டை. (50573)

### தவறிவிட்டது

மயிலிட்டியைச் சேர்ந்த புவனேஸ்வரன் தெய்வானை என்பவரது தேசிய அடையாள அட்டை (676693122V), விசேட அடையாள அட்டை அடங்கிய கறுப்பு நிற பேர்ஸ் திருநெல்வேலிக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 6685862 அல்லது 0777486447 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (50565)

### கொழும்பில் இன்று மருந்தாளர் பரீட்சை

கோப்பாய், மே.27

இலங்கை மருத்துவ சபையால் நடத்தப்படும் மருந்தாளர் பயிற்சிநெறி (வெளிவாரி) இறுதிப் பரீட்சை இன்று சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து இம்முறை 50 இற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் சென்று தோற்றுவது குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சி வலயத்தில் இலக்கிய சங்கம் ஆரம்பம்

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை இலக்கிய சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறும். பாடசாலைகளின் இலக்கிய சங்கத்தின் தலைவர், செயலாளர், பொறுப்பாசிரியர் ஆகியோரை இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

ஏற்கனவே பாடசாலைகளில் இலக்கிய சங்கம் ஆரம்பிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (117)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

"கலைதிகழ்" கோண்டாவில் மண்ணின் மைந்தன் "இசைஞான கலாநிதி" "கான இசைமணி" நாதஸ்வர வித்துவான்

**V.K.கானமூர்த்தி**

"கலாபூஷணம்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதை இட்டு மகிழ்ச்சி அடைவதோடு, மேலும் பல விருதுகள் பெற இறைவனை வேண்டுகிறோம்.

தவில் P. கணேசன் குடும்பத்தினர்
தவில் S. கண்ணபிரான் குடும்பத்தினர்
(50581)(21.14.17)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



இசையுலகில்
பெரும் புகழை நிலைநாட்டி
கலாபூஷணம் விருதுபெற்ற
நாதஸ்வர வித்துவான்

**V.K.கானமூர்த்தி**

அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்

வாழ்த்துபவர்:
**திருச்செல்வம் புஸ்பராணி**
குடும்பம் (தவில்)
(50579) (21.14.17)

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பெற்றோரும் நலன் விரும்பியும் சேவையாளனுமாகிய திருகோணமலை மாகாணக் கல்வி அமைச்சின் நூலகர்
**க.நந்தகுமார்** அவர்களின் அன்பு மாமி
திருமதி **இராசநாயகம் சரஸ்வதி**
(பேபி அன்ரி)

அவர்கள் கனடாவில் காலமான செய்திகேட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீரஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

– பாடசாலைச் சமூகம்.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
(50578) (21.14.17)

### பத்தொன்பதாவது நெஞ்சகலா நினைவஞ்சலி



தோற்றம் 03 . 04 . 1930
மறைவு 27 . 05 . 1987

**அருளம்பலம் முத்துராசா**

(முன்னாள் உப தபால் அதிபர், தொண்டைமானாறு)

"ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறாது எம் துயரம் மாறாது எம் நினைவலைகள்"

- குடும்பத்தினர்.

காளிகோவிலடி, கெருடாவில, தொண்டைமானாறு.
(சி-49423) (21.14.17)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



**வன்னித்தம்பி புஸ்பதேவன்**

காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகத்தில் 38 வருடங்கள் M.S.O. ஆக சேவையாற்றி சர்வதேச அஞ்சல்தினம் 2005இல் கண்டியில் தபால்மா அதிபதியினால் கௌரவிக்கப்பட்டு 07.12.2005இல் யாழ்.தபால் திணைக்களத்தில் பிரதி அஞ்சல்மா அதிபதியின் தலைமையில் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் சிவசுவாமி அவர்களால் சிறந்த சேவையாற்றிய உத்தியோகத்தர் கௌரவிப்பு விழாவில் பாராட்டுப்பத்திரமும் கேடயமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவராகிய **வன்னித்தம்பி புஸ்பதேவன்** அவர்கள் இன்று 27.05.2006 அகவை 60இல் ஓய்வுபெறும் இவ்வேளை பெறற்கரியபேறு மேலும் பல பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம். (சி-49409) (21.14.17.32)
ரகுநாதன் குடும்பத்தினர்.

### வாழ்த்துகின்றோம்



நாதகான இசைமணி, இசைஞான கலாநிதி, நாதஸ்வர வித்துவான்

**V.K.கானமூர்த்தி**

அவர்கள் 22.05.2006இல் கலாசார அமைச்சினால் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவரை வாழ்த்தி மகிழ்ச்சி அடைவதோடு, மேலும் பல விருதுகள்பெற ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய முருகப் பெருமானை இறைஞ்சுவோமாக

வாழ்த்துவோர்:
**இராமலிங்க ஐயர், வாகீஸ்வரன் ஐயர்,**
**மூத்தநயினார் கோயிலடி**
ஆனைக்கோட்டை
(குட்டான் ஐயர்)
(50558) (21.14.17)

### வாழ்த்துகின்றோம்



கலாபூஷணம் விருதுபெற்ற
நாதஸ்வர வித்துவான்

**V.K.கானமூர்த்தி**

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்

**சிங்கம்ஸ் பார்மஸி**
கோண்டாவில் மேற்கு.

சிங்கம்ஸ் இல்லம்,
கோண்டாவில் மேற்கு.
(50576) (21.14.17)

## மரண அறிவித்தல்கள்

### ஜெயலஷ்மி வேல்முருகு

யாழ்ப்பாணம் - திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவில் வசித்தவருமான ஜெயலஷ்மி வேல்முருகு (மேனகா) ஞாயிற்றுக்கிழமை 21.05.2006 அன்று பிலடெல்பியா, அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் வேல்முருகுவின் (Formerly of Agriculture Department) அன்பு மனைவியும் Dr.பார்வதி (அமெரிக்கா), செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தாயும் திருநாவுக்கரசுவின் மாமியும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் - மனோன்மணியின் மகளும் காலஞ்சென்ற Dr. விஸ்வங்கத்தின் மருமகளும் திருமதி ஜேகதீஸ்வரி ராஜசுந்தரம், ஜெயசுந்தரம் ஆகியோரின் சகோதரியும் ராஜசுந்தரம் (Retd. Asst. Supt. Of Police), ராஜேஸ்வரி ஆகியோரினதும் காலஞ்சென்ற திருமதி தம்பிப்பிள்ளை, வேலுப்பிள்ளை மற்றும் திருமதி முத்துலிங்கம், ஜெயரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை புதன்கிழமை 24.05.2006 அன்று பிலடெல்பியா - அமெரிக்காவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

முகவரி:Apt. 904 South
2200 Benjamin Franklin Pkwy,
Philadelphia PA19130
USA.
(50570)(21.14.33.17)

தகவல்:
Dr.பார்வதி (மகள்)
2156650728
(அமெரிக்கா)

### திருமதி தங்கலட்சுமி மாணிக்கவாசகர்

யாழ்ப்பாணம், 859, நாவலர்வீதி, அரியாலையைச் சேர்ந்த திருமதி தங்கலட்சுமி மாணிக்கவாசகர் அவர்கள் 23.05.2006 அன்று லண்டனில் இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் ப.வைத்திலிங்கம் - பாக்கியலட்சுமி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற அதிபர் க.மாணிக்கவாசகர் அவர்களின் மனைவியும் காலஞ்சென்ற தே.சிவானுகூலம், கதிர்காமநாதன், காலஞ்சென்ற க.வல்லாம்பிகை, பேரின்பநாதன், ராமநாதன், ஜெகநாதன், குணலட்சுமி, கோகிலலட்சுமி கணேசநாதன் ,மோகனா, சிறிரங்கநாதன் ஆகியோரின் சகோதரியும் அமரர் க.கந்தையாவின் மைத்துனியும் காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் பாலராணி, யசோதராணி, பிரேமராணி, பாலேந்திரா, நகேந்திரா ஆகியோரின் அருமைத் தாயும், ந.வேல்முருகு, க.சொர்ணலிங்கம் காலஞ்சென்ற ப.கருணானந்தன், சுமதி, யசோதரா ஆகியோரின் அன்பு மாமியும் அம்பிகை, மயூரன், சுமணா, அனுஷா, சசீந்திரன், சாமின், சபேசன், ஜெமி, பிரசான், சுபத்திரா, தனஞ்செயன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் லண்டனில் 28.05.2006 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

54,Evelyn Drive, Hatch End,
Pinner, Middlesex HA5 4RS U.K

தகவல்:
கலாநிதி ந.வேல்முருகு
(சி-49419)(21.14.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றும் திருமதி ஜெ.தர்சினி அவர்களின் அன்புக் கணவர்

**சபாபதிப்பிள்ளை ஜெயபாலன்**

(இ.போ.ச. - பரிசோதகர் காரைநகர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
(50591) கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் - அலுவலர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பஞ்சாட்சரம் பரமேஸ்வரி



(ஓய்வு பெற்ற சிறைச்சாலை ஊழியர்)

பஞ்சாட்சரம் பரமேஸ்வரி அவர்கள் 23.05.2006 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சாட்சரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற துரைராசா- செல்லம்மா அவர்களின் அன்பு மகளும் சோதிநாதன் (சின்னக்கிளி-லண்டன்), காலஞ்சென்ற யோகராசா, சிவநாதன் (செல்வம்), சிவானந்தன் (ஜீவா-லண்டன்), சிவகுமார் (சாந்தன்-லண்டன்), திருமதி புஸ்பகௌரி ஆகியோரின் அன்புத் தாயும் இந்திராணி, புவனேஸ்வரி, சிவதேவகி, யசோ, கலைச்செல்வி, முத்துச்சாமி ஆகியோரின் அன்பு மாமியும் திருமதி.எஸ்.நந்தினி, சுகந்தன், திருமதி தர்சினி, பிரதீபன் (குகன்),புவனராஜன், புஸ்பராஜன், திலகராஜன், கோகிலராஜன், கிருஸ்ணராஜன், சிவவிஜி, சிவசங்கர், சிவரம்யா, சிவறாகவன், மிருதுளா, மிருதுளன், சாருகா, டிவர்சன், நிருஜன், விஸ்ணுதன், பிரியா, பிரியதர்சினி, பிரியலோஜினி ஆகியோரின் பேர்த்தியும் சாரங்கா, மிதுஸ், சிறீமன், கரிஸ்ராகவன், சௌபர்ணிகா, ரிஸிதரன், ரிஸ்மிகா ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்ற சண்முகராஜா, காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் சுந்தரலிங்கம், இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.05.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*54/11,சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை, பாண்டியன் தாழ்வு, கொழும்புத்துறை.*

தகவல்: **பிள்ளைகள்.**

(சி.49428) (39.16.14.26)

## செல்லையா கணபதிப்பிள்ளை (மத்தேயு)

*(இளைப்பாறிய ஊழியர் - நில அளவைத் திணைக்களம்)*



கல்வயலைப் பிறப்பிடமாகவும் அல்லாரையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கணபதிப்பிள்ளை அவர்கள் 25.05.2006 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும் இராசம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் ஞானசக்தி (றூத்), சிவசக்தி (மேரி), சிவகுமார் (கிரியோன்), சிவமோகன் (டேவிட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருட்பிரகாசம், சுதர்ஷன், நிரஞ்சனி, றொஸ்னி ஆகியோரின் மாமனும் எல்றோய், றோஜிதா, கேரன்ஷாமா, ஜோய்ஷரோன், றொஷேல் கெர்சிகா, ஜோயல் கெர்சோன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற நாகம்மா மற்றும் செல்லாச்சி, காலஞ்சென்றவர்களான காத்தலிங்கம், பத்மநாதன் மற்றும் சண்முகானந்தம், வாரித்தம்பி, புஸ்பராணி, அருளம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.05.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொற்பிலவு சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஊழியக்காரர், விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அல்லாரை வடக்கு, மீசாலை.**

(50537) (32.16.14.26)

தகவல்: **சிவமோகன் (மகன்).**

## திருமதி சரஸ்வதி (பேபி) இராசநாயகம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இராசநாயகம் 25-05-2006 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் **B.N.**இராசநாயகம் (ஓய்வுபெற்ற மிருகவைத்திய ஆலோகசர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நொத்தாரிஸ் காசிப்பிள்ளை - மரகதவல்லி தம்பதியரின் கனிஷ்ட மகளும் இராசநாயகம் - அலிஸ்நேசம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சிவகாமி, நாகரத்தினம், செந்தில்நாதன், தனலட்சுமி மற்றும் இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்,செல்வநாயகம் மற்றும் வெற்றிவேலு, இரத்தினம்பிள்ளை, நேசமலர் துரைசிங்கம், ஜெகராசசிங்கம், இராசசிங்கம் மற்றும் மகேஸ்வரி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சசிகலா(கனடா), நிரஞ்சலா, சிரோமினி (ஆசிரியை, உயரப்புலம் மெ.மி.வித்தியாலயம்), சுஜித்தா (டென்மார்க்), செந்தீசன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் குணராசா(கனடா), பத்மநாதன், நந்தகுமார் (மாகாணக்கல்வி அமைச்சு, திருகோணமலை), மோகனகுமார் (டென்மார்க்), றோஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் மிருணன், கீர்த்திகா, ஜீவிதன், ருக்ஷாயினி, ரூபலவன், கிந்துஷன், வேதாஷினி, வர்ணவி, நிலூஷினி, நிலுஷன், வாகினி, யோசுவா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (29-05-2006) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**MR.B.N.RASANAYAGAM,**
**7 st EMILION WAY,**
**CLOBICOKE ONT**
**M9 V5 A5**
**T.P.No.: 001 416 7402731**
(50590) (26.15.17)

தகவல்:
***பிள்ளைகள்:***
**நிரஞ்சலா, பத்மநாதன், சிரோமினி, நந்தகுமார்.**
**உபதபாற்கந்தோர் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**
**T.P.No.:021 4590490**

# ராஜா யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த

## பட்டியல்

புதிய வெளியீடு

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

# நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்

பீட்டர் ஜிட்சஸ்சனின்

## கிங் - கொங் King Kong

தங்கத் தமிழ் மொழியில்

(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)

காட்சி நேரம் : 10.30, 2.30

# IIS

**A/L பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் விரைவில் ஆரம்பம்**

விபரம் 07.06.2006 உதயனில்

இயக்குநர் IIS
இல. 100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2831

# கண்ணீர் அஞ்சலி

**எங்கள் சகமாணவன் சிவசங்கரின் அன்புச் சகோதரனும் போதனா வைத்தியசாலையின் ஊழியருமான**

**சிவானந்தன் சிவகுமாரன்**

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து துயரடைகிறோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு எமது ஆழ்ந்த ஆனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவிக்கிறோம்.

2ஆம் வருட மாணவர்கள்,
உயர்தேசிய ஆங்கில டிப்ளோமா,
உயர்தொழில்நுட்ப நிறுவனம்,யாழ்ப்பாணம்.
(50583) (26.16.14)


## சித்திரைப் புத்தாண்டு சீட்டிழுப்பு நிகழ்வு

யாழ்.பிரதேச செயலகத்தின் சமுர்த்தி மகா சங்கத்தினரால் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட சீட்டிழுப்பு வைபவம் கடந்த புதன்கிழமை சமுர்த்தி மகா சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் யாழ்.பிரதேச செயலர் எம்.பற்றிக் டிறஞ்சன், யாழ்.பிரதேச செயலகக் கணக்காளர் வேல்நிதி, யாழ்.பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் மகேஸ்வரன் மற்றும் சமுர்த்தி கட்டுப்பாட் டுச் சபை உறுப்பினர்கள் சமுர்த்தி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சீட்டிழுப்பில் வெற்றி பெற்றோரின் விவரங்கள் வருமாறு:-

✱ யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி
முதலாம் பரிசு: சதா சகாயமாதா சிறுகுழு
இடண்டாம் பரிசு: பைபிள் சிறுகுழு
3ஆம் பரிசு: கோ.நிதர்சனா சிறுவர் கணக்கு.

✱ யாழ்.நகர் மேற்கு சமுர்த்தி வங்கி.
முதலாம் பரிசு: வி.தமிழ்ச் செல்வி பங்குக் கணக்கு.
2ஆம்பரிசு: சிலப்ப திகார சிறுகுழு.
3ஆம்பரிசு: த.தீபிகன் சிறுவர் கணக்கு.

(190)

## தீவகத்தில் கணினி நிலையம்

தீவகவலய கணனி வள நிலையத்திற்கு முகாமையாளர், விரிவுரை யாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பிப் போர் ஆகக் குறைந்தது ஆசிரியர் சேவையில் 2-1 தரமுடையவராகவும் 6 மாத பயிற் சியுடையவராகவும் இருக்க வேண்டும். விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பிப் போர் 2 வருட ஆசிரிய சேவை யுடன் கணனி விஞ்ஞா னப் பட்டம் அல்லது பட் [illegible] கற்றிருக்கவேண் டும்.


# கண்ணீர் அஞ்சலி



திருமதி ***மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்***

தன்பிரிய தர்மபத்தினியைப் பிரிந்து தவிக்கும் எங்கள் சிரேஷ்டருக்கும் குடும்பத்தினருக்கும் எங்கள் கண்ணீர் அஞ்சலிகளையும் மிக ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எம்பெருமாட்டியை இறைஞ்சுகிறோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

து.இராகுலசூரியன்ஸ், பருத்தித்துறை. (சி.49425)(26.16.14)

**K.N.சச்சிதானந்தனும், குடும்பத்தினரும்.**

# மரண அறிவித்தல்

## காசிப்பிள்ளை நடராசா

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவராகிய காசிப்பிள்ளை நடராசா நேற்று(26.05.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவர் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.05.2006) சனிக்கிழமை பி.ப. 2 மணியவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் களந்தாளம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.*

தகவல்: **குணரூபன்(பேரன்-குணா)**

# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7551264 முதல் 7560668 வரை. சீட்டிழுப்பு இல. 239 திகதி 25-05-2006

### வெற்றி எண்கள்

**8 2 1 5 9 4** சுப்பர் எண் **19**

ஜக்பொட் பரிசு ரூ. **10,229,075/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 10,229,075/= | |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 07 | 50,000/= | 350,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 83 | 5,000/= | 415,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 811 | 500/= | 405,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8107 | 50/= | 405,350/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 80331 | 10/= | 803,310/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 05 | 5,000/= | 25,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 81 | 1,000/= | 81,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 814 | 100/= | 81,400/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8031 | 20/= | 160,620/= |
| | | மொத்தம் ரூ. | 3,727,180/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,329,780/=

ரூ. 75,325/- பெறுமதியான சுட்டி மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 7559923-5-80 |
| பதுளை | 7556616-0-55 |
| காலி | 7553436-2-23 |
| அம்பாறை | 7555847-4-25 |
| இரத்தினபுரி | 7552101-9-75 |
| மொனராகல | 7557016-9-47 |
| மாத்தளை | 7554161-5-49 |
| புத்தளம் | 7552560-4-48 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 10,454,475/-

தொடர் இல. 6647558 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 மே 29 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

# நல்லூர் பிரதேச சபை

கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை /ஆட்டிறைச்சிக் கடை என்பவற்றுக்கான

## மீள்கேள்வி அறிவித்தல் - 2006

28.10.2005ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் செய்யப்பட்ட விளம்பரத்திற்கு அமைவாக பின்வரும் இறைச்சிக் கடைகளை 03.06.2006 தொடக்கம் 31.12.2006 வரை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி என்னால் கோரப்படுகிறது.

| இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய (வற் தவிர்ந்த) ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|
| 01 | கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை | ரூ.500.00 | ரூ.5000.00 | ரூ.1,08,281.25 |
| 02 | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | ரூ.500.00 | ரூ.5000.00 | ரூ. 89,191.66 |

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 31.05.2006 புதன்கிழமை மு.ப. 12 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 01.06.2006 வியாழக்கிழமை மு.ப.12 வரை
கேள்வி திறக்கும் திகதி: 02.06.2006 வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணி

மேற்படி கேள்விகள் தொடர்பான விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பிரதேச சபை,**
[illegible]
[illegible]

(சி/49429)(32.16.14.26)

**பொன்னையா வைரமுத்து,**
**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளைப் பேச்சுமேசைக்கு கொண்டுவர தொடர்ந்தும் முயற்சி செய்கின்றதாம் அரசு!

## அமைச்சர் பிரிய தர்ஷன யாப்பா கூறுகிறார்

கொழும்பு, மே 27

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவந்து நிலையான சமாதானத்தை உருவாக்குவதில் அரசு தொடர்ந்தும் தீவிரமாக முயற்சித்துவருகிறது. பேச்சில் கலந்துகொள்வது தொடர்பாகப் புலிகள் தங்களது பதிலை உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

- இவ்வாறு அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றும்போது கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

புலிகள் பேச்சுக்கு வருவதற்குமுன் அவர் களின் மத்திய குழுக் கூட்டம் நடைபெற வேண்டும் என்றும், அதற்காக கிழக்குத் தள பதிகள் கிளிநொச்சிக்குச் செல்வதற்கு அரசு பிரயாண ஒழுங்குசெய்து தரவேண்டும் என் றும், அதன்பிறகுதான் பேச்சுக்கு வருவோம் என்றும் கூறினர்.

பேச்சு இடம்பெறவேண்டுமென்பதற்காக நாம் கப்பல் மூலம் பிரயாண வசதிகளைச் செய்துகொடுக்க முன்வந்தோம். கடற்படைமீது சந்தேகம்கொண்டு அதைப் புலிகள் நிராகரித்துவிட்டனர்.

கப்பலுக்குப் பதிலாக ஹெலிகொப்டரை வழங்க முன்வந்தோம். அதிகப் பேரை ஏற்ற வேண்டியிருப்பதாகவும், அரசு வழங்கும் ஹெலிகொப்டரில் இடவசதி இல்லையென்றும் கூறி அதனையும் நிராகரித்துவிட்டனர்.

பின்னர் ? - பிளேன் வழங்கமுன்வந்தோம். சீ -பிளேனை தரை இறக்குவதில் முரண்பட்டுக்கொண்டு புலிகள் நின்றனர்.

நாம் புலிகளுக்குப் பிரயாண வசதிகளைச் செய்துகொடுக்கத் தயாராகவிருக்கின்றோம். புலிகள் இன்னும் பதில் சொல்லவில்லை.

புலிகளைச் சர்வதேச நாடுகள் தடை செய்யத் தயாராகிவரும் இந்த நிலையில் நாம் புலிகளுடன் பேசமுன்வந்திருப்பது முக்கியமான ஒரு விடயமாகும். புலிகள் பேச்சிலிருந்து நழுவிக்கொள்ளாமல் உடனடியாக அவர்களது பதிலைச் சொல்லவேண்டும். (க)

# நியாப் திட்ட பிரதிப் பணிப்பாளர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

உலக வங்கியின் உலக உணவுத் திட்டத்தின் கீழ் உள்ள வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன, விவசாயத் திட்டத்தின் ('நியாப்') மாகாணப் பிரதிப் பணிப்பாளரான பொறியியலாளர் ரட்ணம் ரட்ணராஜா (வயது-48) நேற்று மட்டக்களப்பு மாவட்டம் கள்ளியங்காடு என்ற இடத்தில் வைத்து துணை இராணுவக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் அவரது வாகனச் சாரதியான கே.சந்திரசேகரன் (வயது-35) படுகாயமடைந்தார்.

மட்டக்களப்பு நகருக்கு வடக்கே இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள கள்ளியங்காடு என்ற இடத்தில் வலையக் கல்வித் திணைக்களத்துக்கு அருகில் உள்ள தமது காரியாலயத்தில் இருந்து மதிய உணவுக்காக பிற்பகல் 2.15 மணியளவில் தமது வீட்டுக்கு சென்றுகொண்டிருந்தபோது வீட்டுக்கு அருகில் மறைந்திருந்த இனந்தெரியாத நபர்கள் இவர் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று கூறப்படுகிறது. பொறியியலாளர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இவரது சடலம் நேற்றுமாலை மட்டக்களப்புப் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

தமது பதவியில் இவர் மிகவும் நேர்மையான அதிகாரியாகப் பணியாற்றி வந்தார் என்றும் -

மட்டக்களப்பில் 'நியாப்' திட்டப் பணிகளில் தனது நெருங்கிய உறவினர்கள் சிலரை முக்கிய பதவிகளில் நியமிக்கும்படி கருணா குழுவைச் சேர்ந்த மார்க்கன் என்பவர் பல தடவைகள் இவருக்குத் தொலைபேசி மூலமாக அச்சுறுத்தல் விடுத்து வந்தார் என்றும் கூறப்பட்டது.

உயிரிழந்த பணிப்பாளர் ரட்ணராஜாவுக்கு மனைவியும், பிள்ளைகள் இருவரும் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவரான கே. சந்திரசேகரன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (க)

# இராணுவத் தளபதியை நேற்று ஜனாதிபதி சென்று பார்த்தார்

இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நேரில் சென்று பார்த்தார்.

இராணுவத் தளபதியின் உடல் நிலைமை குறித்து விவரம் கேட்டறிந்த ஜனாதிபதி, அவருக்குத் தேவைப்படும் இதர மருத்துவ வசதிகள் குறித்தும் வினவியிருக்கிறார்.

தனது உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதியிடம் கூறியிருக்கும் இராணுவத் தளபதி, தாம் வெகு விரைவில் கடமைக்குத் திரும்புவாரென்றும் தெரிவித்திருக்கிறார் என அறியவந்தது. (க)

# செட்டிக்குளத்தில் இளைஞனின் சடலம்

கொழும்பு,மே27

மதவாச்சி - மன்னார் வீதியில் செட்டிக்குளம் பொலீஸ் நிலையத்திற்கு அண்மையில் கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலத்தை செட்டிக்குளம் பொலீஸார் நேற்று மீட்டுள்ளனர்.

சடலத்தின் அருகில் துண்டுப்பிரசுரம் ஒன்றும் காணப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா மாவட்ட பதில் நீதிவான் எம். சிற்றம்பலத்திற்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சடலத்தை வவுனியாவுக்குக் கொண்டு வருமாறு செட்டிக்குளம் பொலீஸாருக்கு அவர் உத்தரவிட்டார். இது தொடர்பாகப் பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க)

# போவரின் போக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது கை ஓங்கிய பின்னர் அமைதி முயற்சிகளில் தமிழர் தரப்பு சமச்சீராக நடத்தப்படவில்லை என்ற ஆதங்கமும் எழுந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலத்திலும் பின்னர் யுத்தநிறுத்தம் தொடரும் இந்த நான்கரை ஆண்டு காலத்திலும் இப்போதுள்ளவைபோல பல தடவைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தடை விதிக்கும் யோசனை ஐரோப்பிய ஒன்றியத்தின் தீவிர பரிசீலனைக்கு வந்திருக்கின்றது. அப்போதெல்லாம் அந்த நடவடிக்கையை முன்னெடுக்க விடாமல் தடுத்ததில் அனுசரணைத் தரப்பான நோர்வேக்குக் கணிசமான பங்கு இருந்ததாகக் கூறப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேசத் தடை, சர்வதேச பங்களிப்பிலிருந்து விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தி, ஒதுக்கி விடுவதால் அத்தகைய நடவடிக்கை சமாதான முயற்சிகளை அடியோடு குழப்பி, அமைதிப் பேச்சுகளை சீர்குலைத்து, முழு யுத்தத்துக்கே வழிவகுக்கும் என்று நோர்வே சுட்டிக்காட்டி வந்ததால் அந்த நடவடிக்கையை எடுப்பதை அப்போதெல்லாம் ஐரோப்பிய ஒன்றியம் ஒத்திப் போட்டு வந்தது.

அத்தகைய நடவடிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் எடுக்காமல் தடுத்து வந்ததன் பின்னணியில் அதுவரை அனுசரணைப் பணிக்கான விசேட தூதுவராக இருந்த எரிக் சொல்ஹெய்மின் பங்கு, பணி முக்கியமானதாக இருந்தது எனத் தமிழர் தரப்பு நன்றியுடன் கருதுகின்றது.

ஆனால், எரிக் சொல்ஹெய்ம் நோர்வே அரசில் ஓர் அமைச்சராகி இலங்கை அமைதி முயற்சிகளின் அனுசரணைக்கான தூதுவர் பொறுப்பு ஹன்ஸன் போவரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் இந்த நிலைமையில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருப்பதைத் தமிழர் தரப்பு உணர்ந்து கொள்ளத் தொடங்கியதாகவும் கூறப்படுகின்றது.

ஆசிரியர்கள் தேவை
தரம் 4 முதல் O/L வரை பிரிவு இரண்டிற்கான புதிய ஆசிரியர்கள் தேவை.
பயிற்றப்பட்டவர்களும் எமது சுற்றாடலில் உள்ளவர்களும் விரும்பத்தக்கது.
சனி, ஞாயிறு காலை 10 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.
சயன்ஸ் அக்கடமி
நல்லூர்.

சொல்ஹெய்ம் ஓர் அரசியல்வாதி. சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு விரும்பி அடிபணிபவரல்லர். இலங்கை விவகாரத்தில் பழுத்த அனுபவமுள்ள அவர், ஈழத் தமிழர்களின் போராட்டத்தின் பின்னால் உள்ள நியாயங்களை நன்கு புரிந்தவர். இலங்கைப் புரிந் துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் சம தரப்புகளாக நோக்கவேண்டும் என்பதில் சிரத்தை உடையவர்.

ஆனால், ஹன்ஸன் போவர் அப்படியல்லர். அவர் ஓர் அரசியவாதியும் அல்லர். புத்திஜீவி. அமெரிக்க சார்புப் போக்கில் கற்றறிந்த ஒரு கல்விமான். அதிகார வர்க்கத்து நிர்வாகி. தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தையும் அதன் பின்னால் உள்ள நியாயங்களையும் ஓர் அரசியல்வாதிக்குரிய பார்வையில் நோக்கக் கூடியவரல்லர். இலங்கையின் இறைமையுள்ள அரசையும், ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பான புலிகளையும் சம தரப்பாகப் பேணி விடயங்களைக் கையாள்வதில் போவருக்கு ஆரம்பத்திலிருந்தே சிரமங்கள் இருந்தன என்று கூறப்படுகின்றது. இலங்கை அரசு போன்று புலிகள் தங்களையும் சமதரப்பாகக் கருதி செயற்படுகின்றமையும், சில விடயங்களில் பிடிவாதம் பிடிக்கின்றமையும் போவரை எரிச்சலுக்குள் ஆழ்த்தி வந்தன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் -

இப்போது மீண்டும் புலிகளுக்கு எதிராகத் தடை கொண்டுவர ஐரோப்பிய ஒன்றியம் முயற்சிக்கும்போது - முன்னைய தடவைகள் போலல்லாது இம்முறை - அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில் நோர்வேத் தரப்பினர் அதிகம் ஈடுபாடு காட்டவில்லை என்று குறைபட்டுக் கொண்ட புலம் பெயர்ந்த தமிழர்கள், அதற்கு போவரின் பங்களிப்பும் காரணம் என்று கருத்து வெளியிடுகின்றனர்.

ஹன்ஸன் போவரோடு தனிப்பட்ட முறையில் உரையாடல்களை வைத்துக்கொண்ட சில புலம்பெயர் தமிழர்களும் போவரின் நடுநிலைப் போக்குக் குறித்து அதிருப்தி கொண்டிருக்கின்றனர் என்றும் பேச்சுகள் அடிபடுகின்றன.

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான அனுசரணைப் பணியில் நோர்வேயின் அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தொடர்ந்தும் பங்காற்றி வருகின்றார் என்றாலும் -

அந்தப் பொறுப்பு முழுமையாக நோர்வேயின் வெளிவிவகார அமைச்சினாலேயே கையாளப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சில், இவ்விடயத்தில் அமைச்சர் சொல்ஹெய்மை விட போவருக்கு செல்வர்க்கு அதிகம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையில் -

ஹன்ஸன் போவர் இன்று கிளிநொச்சி சென்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்து உரையாடவிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# சிமெந்து மற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு யாழ். மற்றும் வவுனியா அரச அதிபர்களுக்கு அறிவித்துள்ளது. இதனால் ஏற்கனவே சிமெந்துப் பைகளுடன் ஓமந் தைச் சோதனைச் சாவடி யில் தரித்து நிற்கும் 20 லொறிகளும் வடக்குக்கு வரமுடியாத சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. அவற்றை மேற்கொண்டு பயணிக்க அனு மதிக்க முடியாது என்று படையினர் தெரி வித்துள்ளனர்.

இந்தத் தடை குறித்து யாழ்ப்பாணத்தில் உள்ள படையினரின் சிவில் நிர்வாக அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது தமக்கு அதுபற்றிய எதுவித அறிவித்தலும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

2002 ஆம் ஆண்டு போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னர் இந்தப் பொருள்களை வடக்குக்கு எடுத்துச் செல்வதற்குக் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. உடன்படிக்கையின் பின்னர் அத்தடைகள் விலக்கப்பட்டுத் தாராளமான விநியோகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தற்போது சமாதான நிலைமை சீர்குலைந்து போர் ஏற்படக் கூடிய ஒரு சூழல் தோன்றியுள்ளதை அடுத்து இந்தத் தடை மீண்டும் விதிக்கப்பட்டுள்ளது. இது மக்கள் மத்தியில் போர் பற்றிய அச்சத்தை மேலும் அதிகரித்துள்ளது. (ம)

# மோ. சைக்கிளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யொருவர் சோதனையிட்டுக் கொண்டிருந்த சமயம் மற்றைய இளைஞர் அருகில் இருந்த கடைக்குள் செல்ல முற்பட்டார். அவரைப் பிடித்த படையினர் சோதனையிட முயன்றனர். அப்போது அவர் மறைத்து வைத்திருந்த பிஸ்டலால் சிப்பாய் ஒருவர் மீது வேட்டுக் களைத் தீர்த்தார்.

"சூடுபட்ட சிப்பாய்க்குச் சற்றுத் தொலைவில் நின்ற மற்றைய சிப்பாய்கள் உடனடியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இரு இளைஞர்களையும் கொன்றனர்." - என்று நீதிவான் விசாரணையின் போது படையினர் சாட்சியமளித்தனர்.

இரு இளைஞர்களும் சம்பவ இடத்திலேயே பலியாகினர். அவர்களில் ஓர் இளைஞனிடம் இருந்த அடையாள அட்டை மூலம் அவர் இனங்காணப்பட்டார். யாழ். அரியாலையைச் சேர்ந்த மகேந்திரன் பிரதீபன் (வயது 22) என்பவரே அடையாளம் காணப்பட்டவராவார். மற்றைய இளைஞனிடம் ஆவணங்கள் ஏதும் இருக்கவில்லை.

இளைஞர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளைப் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். அதற்கு இலக்கத் தகடு இருக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அதேசமயம், அந்த மோட்டார் சைக்கிள் கடந்தவாரம் காணமற் போயிருந்தது என்றும் அது பற்றிக் கோப்பாய் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

விசாரணை முடிவில், உயிரிழந்த இளைஞர்களின் சடலங்களை பிரேதபரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ம-15-78-86-139)

# மூதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணை இராணுவத்தினராகிய கருணா குழுவினர் நேற்றுக் காலை 7.30 மணியளவில் மூதூர், தோப்பூர் - பட்டியடிப் படை முகாமிலிருந்து புலி களின் முன்னரங்கப் பகுதி நோக்கி நகர்வை மேற்கொண்டனர்.

அவர்கள் மீது புலிகளின் சிறப்பு அணியினர் தாக்குதலை நடத்தினர். இதில் துணை இராணுவக் குழுவினர் மூவர் கொல்லப்பட்டனர். இருவர் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவத்தின்போது துணை இராணுவத்தினருக்கு ஆதரவாக இராணுவ முகாமிலிருந்து புலிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் படை முகாம் அருகில் கிடந்தன. படையினர் தாக்குதல் நடத்திக் கொண்டே அச்சடலங்களை எடுத்துச்செல்ல முயன்றனர்.

தாமும் தமது குழுவில் மேலும் பலரும் படை முகாமில் இருந்தனர் எனவும் புலிகளின் நிலையைத் தாங்கள் அவதானிக்க வந்தனர் எனவும் கைது செய்யப்பட்ட இருவரும் தெரிவித்துள்ளனர்.

- என்று கூறப்பட்டது. (க)

கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் சாலையின் (இ.போ.ச.) முன்னாள் சாலைப் பரிசோதகரும் தற்போது காரைநகர் சாலையின் சாலைப் பரிசோதகருமாகிய
சபாபதிப்பிள்ளை ஜெயபாலன்
அவர்களின் மறைவிற்கு ஆழந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.
எஸ்.ஞானசேகரம் (சாரதி - இ.போ.ச.) கோண்டாவில்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org